பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 05 ஞாயிற்றுக்கிழமை (19-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:175

# சமூக ஒழுங்குக் கட்டமைப்பைச் சீர்குலைக்கும் சக்திகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை!

## மக்களின் ஒத்துழைப்புக் கோருகிறார் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்



பளை,மே19

தமிழ் தாயகப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உருவாக்கிவரும் சீரிய சமூகக் கட்டமைப்பைச் சீர்குலைக்க சில சக்திகள் திரைமறைவில் செயற்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் இடம்பெறும் சமூகச் சீரழிவுச் செயல்களுக்குப் பின்னணியில் இருக்கும் சக்திகளுக்கு எதிராக மக்களின் ஒத்துழைப்போடு கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

பளையில் உள்ள காவல்துறை பணிமனையில் வைத்து நேற்று 'உதயன்' செய்தியாளருக்கு நடேசன் செவ்வியளித்தார்.

குடாநாட்டில் என்றும் இல்லாதவாறு தலையெடுத்திருக்கும் சமூகச் சரழிவுச் செயல்கள் தொடர்பாக அப்போது அவர் தனது கவலையை வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் இடம்பெறும் சம்பவங்களை நாங்கள் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். அங்கு சமூக ஒழுங்கு மிகவும் சீரழிந்து போய்விட்டது.

சட்டம், ஒழுங்கு முறையாகப் பேணப்படவில்லை. கொலை, களவு, பாலியல்வல்லுறவு, கோஷ்டிச் சண்டை, பெண்கள் மீதான சேஷ்டைகள், போதைவஸ்துப் பாவனை, கசிப்பு,

(02ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை எண்ணெய்க் குதங்களைப் பெற இலங்கையோடு இந்தியா உடன்படிக்கை

## ரணிலின் விஜயத்தின்போது புதுடில்லியில் கைச்சாத்தாகும்

கொழும்பு,மே19

**திருகோணமலை சீனக்குடாவில் உள்ள பெரிய நூறு எண்ணெய்த்தாங்கிகளில் சிலவற்றை இந்தியா வாடகைக்குப் பெறவுள்ளதாகத் தெரியவருகிறது. இதற்கான உடன்படிக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தமாதம் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளும்போது புதுடில்லியில் கைச்சாத்திடப்படும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

சீனக்குடாவில் உள்ள எண்ணெய்த் தாங்கிகளில் சுமார் 10தாங்கிகளை இந்தியப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது தேவைக்குப் பயன்படுத்துவதற்காக வாடகைக்குப் பெற விரும்புவதாக இந்தியா ஏற்கனவே தெரிவித்திருந்தது.

கொழும்புக்கான இந்தியத் தூதரும், தூதரக அதிகாரி ஒருவரும் கடந்த மாதம் திருமலையில் எண்ணெய்த் தாங்கிகள் உள்ள பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

# ஓகஸ்ட் மாதம் புலிகள் போர் தொடங்குவராம்!

## இப்படிக் கூறுகிறார் அனுரா

கொழும்பு,மே19

விடுதலைப் புலிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தாக்குதலை ஆரம்பிப்பார்கள்.

- இவ்வாறு கூறியிருக்கிறார் முன்னாள் சபாநாயகரும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரருமாகிய அனுரா பண்டாரநாயகா.

கெஸ்பாவ பகுதியில் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அனுரா இதனைத் தெரிவித்தார்.

புலிகள் பெரும்பாலும் ஓகஸ்டில் சண்டையை ஆரம்பிப்பார்கள். அதற்கான ஆயத்தங்களில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கில் இருந்து 10 வயதுக்கு மேற்பட்டோரை கட்டாயமாக ஆள்சேர்த்து சுமார் 3ஆயிரம் பேருக்கு மட்டக்களப்புக் காடுகளில் புலிகள் பயிற்சி அளித்து வருகின்றனர் - என்றார் அனுரா.

(ஐ)

# மீள்குடியமர்வைத் தடுத்தால் மக்கள் போராட்டம் வெடிக்கும்!

## மாவை எம்.பி. எச்சரிக்கிறார்

யாழ்ப்பாணம்,மே19

மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு படையினர் திட்டமிட்டு தடைவிதித்தால் விடுதலைப் புலிகளுடன் கூடி ஆராய்ந்த பின்னர் அதற்கெதிராக நாடளாவிய ரீதியில் மக்கள் எழுச்சிப் போராட்டங்களை நடத்துவோம்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

சாவகச்சேரி கோவில்குடியிருப்

(12ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



...தங்கடை நலனுக்கு ஆபத்து எண்டால் அயல்நாட்டுக்காரர் முந்தி விடுவினம் பாருங்கோ...!

## நோர்வேக் குழு பாலசிங்கத்தை சந்திக்கும்

கொழும்பு,மே19

நோர்வே சமாதானக் குழுவின் பிரதிநிதிகள் எதிர்வரும் 22ஆம் திகதி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வலப்பனையில் வீடு மீது குண்டுத் தாக்குதல்!

கொழும்பு,மே19

நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை கிராமத்தில் நேற்றிரவு 8.30 மணியளவில் வர்த்தகர் ஒருவரின் வீடு மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர்; நால்வர் காயமடைந்தனர்.

இரு வர்த்தகர் குழுக்களுக்கு இடையில் நீண்டகாலமாக நிலவி வந்த பகையின் விளைவாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ஐ-3)

## அமைச்சர் ஆறுமுகம் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,மே19

வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் எதிர்வரும் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்கின்றார்.

அன்று நண்பகல் 12 மணிக்கு அரச அதிபர், திணைக்களத் தலைவர்களைச் சந்திக்கும் அமைச்சர் இங்கு மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் குறித்து ஆராய்வார். (ஐ-3)

# முகமாலை ஊடாகத் தினமும் 10 ஆயிரம் பேர் பயணம்!

பளை,மே19

ஏ-9 கண்டி வீதி முகமாலை சோதனை நிலையம் ஊடாக தினமும் 10 ஆயிரம் பேர் போக்குவரத்தை மேற்கொள்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இருந்து வெளியேயும், வெளிமாவட்டங்களில் இருந்து குடாநாட்டுக்கும் பயணத்தை மேற்கொள்வோர் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகமாலைச் சோதனை நிலையத்தில் பயணிகளுக்கான வசதிகள் தற்சமயம் அதிகரிக்கப்பட்டுள்ளதாலும் -

கூடுதலான படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாலும் மக்கள் சிரமம் இன்றிப் பயணத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதாக பயணிகள் தெரிவித்தனர்.

தெற்கில் இருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டு தினமும் 50 லொறிகள் முகமாலை சோதனை நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் வருவதாகவும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# வற்றாப்பளை பொங்கலுக்கு இம்முறை இங்கிருந்து பக்தர்கள்!

## ஆலயச் சூழலில் விசேட வசதிகள்

யாழ்ப்பாணம்,மே19

முள்ளியவளையில் உள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

வன்னிப் பகுதிக்கான தரைவழிப் பாதை திறக்கப்பட்டுள்ளதை அடுத்து நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இம்முறை குடாநாட்டில் இருந்து பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் பொங்கல் உற்சவங்களில் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை -

பொங்கல் உற்சவத்தில் கலந்து கொள்வதற்கென வருகை தரவுள்ள வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அடியவர்களின் நன்மைகருதி மேற்படி ஆலயச் சூழலில் விசேட ஏற்பாடுகள செய்யப்பட்டுள்ளன என்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

(எ-173-182)

# தமிழகத்திலிருந்து அகதிகள் மன்னார் திரும்புகின்றனர்

மன்னார்,மே19

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று அங்கு தங்கி இருப்போரில் சிலர் மீண்டும் தாயகம் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து அகதிகள் கடந்த சில தினங்களாக படகு மூலம் மன்னாருக்கு வந்துசேரத் தொடங்கியுள்ளனர்.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டு அமைதிச் சூழல் உருவாகி இருப்பதை அடுத்தே அகதிகள் பலரும் தாயகம் திரும்பத் தொடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிப் படகுகள் மூலம் சிலர் மன்னாருக்கு வந்துசேர்ந்துள்ளனர். எத்தனை அகதிகள் வந்துள்ளனர் என்ற விவரங்கள் தெரியவரவில்லை.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அகதிகளைச் சென்று சந்தித்து அவர்களின் உடனடித் தேவைகள் குறித்து நடவடிக்கை எடுக்க இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இடம்பெயர்ந்து வன்னி சென்றோர் மீண்டும் குடாநாடு திரும்புகின்றனர்

## முகமாலை ஊடாக தினமும் 50 குடும்பங்கள் வருகை

பளை,மே19

இடம்பெயர்ந்து சென்று வன்னியில் தங்கி வாழ்ந்த குடாநாட்டு மக்கள் மீளக்குடியமர விடுதலைப் புலிகள் அனுமதியளித்ததை அடுத்து தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஏ-9 கண்டி வீதி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

உழவு இயந்திரங்கள், கார், லொறி ஆகியவற்றில் தமது வீட்டுத் தளபாடங்கள், சைக்கிள்கள், கால நடைகள் என்பவற்றை ஏற்றிக்கொண்டு முகமாலை ஊடாக மக்கள் யாழ். நோக்கி வருவதைக் காணமுடிகிறது.

தினமும் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் முகமாலை சோதனை நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் வருவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பெரும்பாலான மக்கள் சைக்கிள்களிலும் தமது உடைமைகளைக் கட்டி எடுத்து வருகின்றனர்.

குடாநாட்டில் இருந்து இடம் பெயாநது சென்று வன்னியில் தங்கியுள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரலாம் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். அத்துடன் அவர்களுக்கான 'பாஸ்' நடைமுறைகளையும் புலிகள் தளர்த்தியுள்ளனர்.

வன்னியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவோருக்கு நடைமுறையில் இருந்த 'பாஸ்'முறை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக அனுமதிச்சீட்டு ஒன்றை வழங்கும் நடைமுறையைப் புலிகள் அறிமுகப்படுத்தியுள்ளனர். (ஐ-3)

# கடைசி பஸ்கள் புறப்படும் நேரம் நீடிக்கப்பட வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து தற்போது புறப்படும் கடைசி பஸ்களின் நேரத்தை மேலும் அரை மணித்தியாலமாவது நீடிக்கவேண்டுமென்று பயணிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

குடாநாட்டின் பல்வேறு இடங்களுக்கும் செல்லும் கடைசி பஸ்கள் யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து மாலை 6.30 மணிக்கு அல்லது 7 மணிக்குப் புறப்படுகின்றன.

தற்போது யாழ்நகரில் சனநடமாட்டம் அதிகரித்துள்ளதுடன் கடைகளும் இரவு 7மணிவரை திறக்கப்படுகின்றன. அத்துடன் ஏ-9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து முகமாலையிலிருந்து பெருமளவு பயணிகள் மாலை 6 மணிக்குப் பின்னர் இரவு 8 மணி வரை யாழ்.பஸ் நிலையத்தை வந்தடைகின்றார்கள்.

நேரம் பிந்திவரும் முகமாலைப் பயணிகள் இரவு நேரத்தில் தமது இடங்களுக்குச் செல்ல பஸ் வசதிகளின்றி பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இவற்றைக் கருத்தில்கொண்டு யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் கடைசி பஸ்கள் புறப்படும் நேரங்களை நீடிக்கவேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (ஒ-173)

# உடன்படிக்கையை மதித்து நடக்க படையினர் உறுதிபூணவேண்டும்

## மட்டக்களப்பில் அமைச்சர் மொறகொட

மட்டக்களப்பு,மே19

புரிந்துணர்வு உடன்படிக்கையை மிகுந்த உறுதியுடன் கடைப்பிடிப்பதற்குப் படையினர் ஒவ்வொருவரும் திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அவர் அங்கு இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்த உடன்படிக்கையை பல தடவைகள் மீறியிருக்கின்றனர். ஆனால் படைத்தரப்பினர் பொறுமை இழக்காது நிதானத்துடன் செயற்பட்டுள்ளனர். இது மிகவும் பாராட்டப்படவேண்டியது. இவ்வாறு தொடர்ந்தும் மிகவும் நிதானத்துடனும் சகிப்புத் தன்மையுடனும் நடந்துகொள்ளவேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை இராணுவத்தரப்பால் மீறப்பட்டது என்ற அபகீர்த்தி ஏற்படாதவாறு படையினர் நடந்துகொள்ளவேண்டும் என்றார். (ஐ-4)

### தொண்டமானாறு வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

நாளை (20.05.2002) திங்கள் ஊர் இளைஞர்கள் இணைந்து நடத்தும் வன மஹோற்சவம் நடைபெறவுள்ளது. வசந்த மண்டபப் பூசை மதியம் 12 மணிக்கு நடைபெறும். சாயங்கால உற்சவம் மாலை ஆறு மணிக்கு நடைபெறும்.

இரவு விசேட நிகழ்ச்சியாக - குடத்தனை வடக்கு கண்ணகி கலா மன்றத்தினரின் 'மாலைக்கு வாதாடிய மைந்தன்' என்னும் சிந்து நாடகம் நடைபெறும். நெறியாளும் அண்ணாவியார் ஆ.இராமநாதன்.

*மஹோற்சவ குரு :* கிரியா கலாமணி க.நாகேஸ்வரக் குருக்கள் (எழுதுமட்டுவாழ்)

*விசேட மங்கள வாத்தியம்:* பருத்தித்துறையூர் சி.விஜய்குமார் குழுவினர்.

(3926)

# திருமலை எண்ணெய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்குள்ள எண்ணெய்த் தாங்கிகள் சிலவற்றை வாடகைக்குப் பெற்று அவற்றில் எரிபொருளை சேகரித்து வைத்து தனது கப்பல் போக்குவரத்துத் தேவைகளுக்குப் பயன்படுத்த இந்தியா விரும்புகிறது. இது தொடர்பான பேச்சுக்கள் இரு நாட்டு அதிகாரிகளுக்கு இடையே இடம்பெற்று வந்தன. தற்போது இந்தப் பேச்சுக்கள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும் -

எண்ணெய்க் குதங்களை எவ்வளவு காலத்துக்கு, என்ன நோக்கத்துக்கு வாடகைக்குப் பெறுவது என்ற விவரங்கள் அடங்கிய உடன்படிக்கை ஒன்றில் இரு நாடுகளின் அதிகாரிகளும் அடுத்தமாதம் கைச்சாத்திட இருப்பதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தமாதம் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொள்ளும்போது இந்த உடன்படிக்கை அங்கு கைச்சாத்தாகும் என்று பிரதமர் அலுவலக வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

எத்தனை தாங்கிகளை இந்தியா வாடகைக்குப் பெறப்போகின்றது, அவற்றின் பாதுகாப்புப் போன்ற விவரங்கள் வெளியிடப்படவில்லை. சமாதான முயற்சிகளுக்கு ஆதரவும் அனுசரணையும் பெறும் நோக்கில் - தாய்லாந்தில் அரசு - புலிகள் நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பமாகுவதற்கு முன்னர் - அடுத்த மாதம் 12ஆம் திகதி - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்வார் எனத் தெரிகின்றது.

தனது இராணுவத் தேவைகளுக்குரிய மையமாக இலங்கையை கருதி அங்கு அதற்கான வளங்களை அமெரிக்கா தேடத் தொடங்கியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் -

அமெரிக்கப் போர்க் கப்பல்கள் அடிக்கடி கொழும்புத் துறைமுகத்தை நாடிவரத் தொடங்கியிருக்கின்ற பின்னணியில் -

இந்தியா திருமலை எண்ணெய்க் குதங்களை பெற்றுக்கொள்வது முக்கியத்துவம் வாய்ந்த விவகாரம் என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (ஐ-3)

# சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆபாசப்படம் காட்டுதல் போன்ற கலாசாரத்தைச் சீரழிக்கும் பாரதூரமான குற்றச் செயல்கள் மலிந்துவிட்டன.

இந்தச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். மக்கள் தமது பங்களிப்பை இதற்கு வழங்கவேண்டும். மக்களின் பங்களிப்புடனேயே இந்தச் செயல்களுக்கு சாவு மணி அடிக்க முடியும்.

தலைவர் பிரபாகரன் வடக்கு - கிழக்கில் உருவாக்கிவரும் சமூகக் கட்டமைப்பை குடாநாட்டில் சிதைக்க சில சக்திகள் முன்னின்று செயற்படுகின்றன. அந்தச் சக்திகளே இத்தகைய செயல்களுக்கு காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சக்திகள் விரைவில் ஒழிக்கப்படும். மக்கள் இந்தச் சக்திகளுக்குத் துணைபோகாமல் இருக்கவேண்டும். அப்போதுதான் நல்லதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்பமுடியும். ஆரோக்கியமான - ஒழுங்கான சமூகத்தின் அடிப்படை மீதே தேசக்கட்டுமானத்தை மேற்கொள்ளமுடியும். ஊழலும், பக்கச்சார்புடையதுமான பொலீஸ் நிர்வாகம் செயற்படுவதே சரழிவுச் செயல்கள் அதிகரிக்கக் காரணம் ஆகும். மக்கள் பற்றும், மண்பற்றும் நிறைந்த காவல்துறையினராலேயே இந்தச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

காவல்துறையினரின் பணிகளை உடனடியாக குடாநாட்டுக்கு விஸ்தரிக்கமுடியாது. என்றாலும் குற்றச் செயல்கள் தொடர்பான விவரங்களை நாங்கள் திரட்டி வருகின்றோம். தொடர்புடையவர்களை இனங்கண்டு வருகிறோம். புரிந்துணர்வு உடன்படிக்கையை மதித்து நடக்கவேண்டிய கடப்பாடு எங்களுக்கும் உண்டு. தமிழர் தாயகத்தின் இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் வரும்போது எமது பணிகள் விரிவுபடுத்தப்படும். எமது சேவை சகல மக்களுக்கும் கிடைக்க வழி ஏற்படும். அதுவரை தேசவிரோத சக்திகளுக்குத் துணைபோகாமல் விழிப்புடன் இருந்து எங்கள் பண்பாட்டை- கலாசாரத்தை, தேசிய அடையாளங்களைப் பாதுகாக்கவேண்டிய பாரிய பொறுப்பு மக்களுடையதே - என்றார் பா.நடேசன்.

பொதுமக்களிடமிருந்து வரி அறவிடுவது தொடர்பாகக் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

- மக்கள் மீது சுமைகளைப் போடுவது புலிகளின் நோக்கமல்ல. எந்த ஒளிவு மறைவுமின்றி சிறு தொகையை வரியாக அறவிட்டு வருகிறோம்.

அவை பற்றிய விவரங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. எமது நிர்வாகத்தின் கீழ் செயற்படும் நிறுவனங்களை பராமரிக்கவும், மக்களுக்கான சேவைகளை வழங்கவும் நிதி தேவைப்படுகிறது. அதற்காகவே வரியை அறவிடவேண்டியுள்ளது - என்று தெரிவித்தார்., (ஐ-3)


NKC நியூ கமல் செரமிக்ஸ்

NEW KAMAAL CERAMICS

இதோ! நீங்களும் தெரிந்துகொள்ளுங்கள்!!

★ லங்கா செரமிக்ஸ்
★ லங்கா வோல்ரைல்ஸ்
★ லங்கா ரைல்ஸ் (எல்லாக் கலர்களிலும் உண்டு)
★ CIC பெயின்ற் ஆகியவற்றுக்கு

யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தர்கள்






நாங்களே!

அதுமட்டுமல்ல!

பாத்றூம் பிற்றிங்
❖ கொமோட், படஸ்ரல் வாஷ் பேசன் ❖ ஸ்கொட்டின் பான் ❖ பாத் ரப் (TUB-தொட்டி)
❖ பாத் சவர் ❖ பாத்றூம் கீற்றர் ❖ PVC பைப் வகைகள்
★ கிச்சின் சில்வ சிங், மாபிள் சிங் ★ பாத்றூம் சுத்திகரிக்கும் பொருள்கள்
★ பாத்றூம் பிளாஸ்ரிக் கதவுகள் (நிலையுடன்) வேண்டிய அளவுகளில் பெறலாம்.
★ பிளாஸ்ரிக் வோட்ட ராங் வேண்டிய கொள்ளளவுகளில் பெறலாம் 250L - 2000L

நீரிறைக்கும் மோட்டார் பம்புகள், குழாய்க்கிணறு பம்புகள், சுண்ணாம்பு, கலர் காவி யாவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

☛ மாபிள் பதித்தல், பெயின்ரிங் வேலைகள், பைப் லைனிங், ரெறாசோ இடுதல், பாத்றூம் குசினி மற்றும் தரைக்கு மாபிள் பதிக்கும் வேலைகள் முதலியவற்றை ஒப்பந்த அடிப்படையில் விரும்பிய டிசைன்களில் நல்ல தரமாகச் செய்து கொள்ளலாம்.

NOTE:- *யாழ்ப்பாணத்தில் வீட்டுக்குத் தேவையான சகல கட்டடப் பொருள்களையும் ஒரே இடத்தில் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.*

விசேட காட்சியறை :
மாநகர சபைக் கட்டடம்
இல.2 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(முன்னைய லிடோ தியேட்டர் முன்பாக)
இந்த அறையில் நீங்கள் நேரில் பார்வையிடலாம். (C/22190)

உடனே விஜயம் செய்யுங்கள்

நியூ கமல் செரமிக்ஸ்
37, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 2085

# பாகிஸ்தான் தூதரை நேற்று இந்தியா வெளியேற்றியது!

## இரு நாடுகளிடையேயும் பதற்றம் அதிகரிப்பு!!

புதுடில்லி,மே19

தனது நாட்டில் இருந்து பாகிஸ்தான் தூதுவர் அஷ்ரவ் ஜஹாங்கீர் ஹாஸியை வெளியேற்றியுள்ளதாக இந்தியா நேற்று அறிவித்தது.

பாதுகாப்புத் தொடர்பான அமைச்சரவையின் கூட்டம் நேற்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங் இது தொடர்பான அறிவித்தலை பத்திரிகையாளர்களுக்கு வெளியிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜம்மு பகுதியில் இராணுவத்தினரின் குடியிருப்புப் பகுதி மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 35பேர் கொல்லப்பட்டதற்கு புதுடில்லி எடுக்கவேண்டிய பதில் நடவடிக்கைகள் குறித்து நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் தலைமையில் தீவிரமாக ஆராயப்பட்டது.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்து பாகிஸ்தானே செயற்பட்டது என்பதனால் அந்த நாட்டின் தூதரை நாட்டைவிட்டே வெளியேற்றுவது என்று அங்கு முடிவு செய்யப்பட்டது.

ஆனால், இந்தியாவின் குற்றச்சாட்டை பாகிஸ்தான் அடியோடு மறுத்துள்ளது. அத்துடன் அந்தத் தாக்குதலையும் பாகிஸ்தான் வன்மையாகக் கண்டித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் இந்திய நாடாளுமன்றத்தின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைக் கண்டித்து பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதரை இந்தியா அப்போதே வாபஸ் பெற்றது.

இதனால், இந்தியாவின் தற்போதைய இராஜதந்திர நடவடிக்கைக்குப் பதிலடியாக பாகிஸ்தான் இந்தியத் தூதரை வெளியேற்ற முடியாத நிலை தோன்றியுள்ளது. ஆனால், பாகிஸ்தான் ஏதாவது ரீதியில் இந்தியாவுக்குப் பதிலடி வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பாகிஸ்தான் தூதரை இந்தியா வெளியேற்றியது மற்றும் எல்லையில் கடந்த சில நாள்களாக இரு நாடுகளுக்கும் இடையில் நடந்து வரும் தீவிரமான சண்டை என்பன தெற்காசியாவின் அணுவாயுத நாடுகளுக்கு இடையில் போர் மூளக் கூடிய அபாய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் இரு நாடுகளிடையேயும் பதற்றநிலை அதிகரித்துள்ளது. (ம)



படை நடவடிக்கைக்காக பக்ராம் விமானத் தளத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் அமெரிக்கப்படையினர்



எல்லையில் மோட்டார் தாக்குதலில் ஈடுபட்டிருக்கும் இந்தியப் படையினர்.

## கிழக்கு ஆப்கானிஸ்தானில் மீண்டும் படை நடவடிக்கை

காபூல்,மே19

கிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள மலைப் பகுதியில் பதுங்கியுள்ள அல்கெய்டா தீவிரவாதி களைத் தேடியழிக்கும்நடவடிக்கையை அங்குள்ள பன்னாட்டுப் படைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

பிரிட்டன், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியப் படைகள் இணைந்து கிழக்குப் பக்டியா மாநிலத்தில் இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

இந்த இராணுவ நடவடிக்கைக்காக பக்ராம் விமானநிலையத்தில் இருந்து ஏவுகணைகள் பொருத்தப்பட்ட ஹெலிகள், டாங்கி எதிர்பு ஆயுதங்கள் பொருத்தப்பட்ட ஏ-10 ஹெலிகள் என்பன நாள்முழுவதும் வெளியே பறந்து சென்றதைத் தான் அவதானித்ததாக பி.பி.ஸி. செய்தியாளர் போல் அடம்ஸ் தெரிவித்திருந்தார்.

கடந்த வியாழனன்று இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினருக்கும் அல்கெய்டா தீவிரவாதிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

"சந்தேகத்துக்கு இடமான ஆயுததாரிகளுடன் ஆஸ்திரேலியத் துருப்பினர் சண்டையில் ஈடுபட்டனர் என்று ஆப்கானில் உள்ள பிரிட்டிஷ் துருப்புக்களின் உயர் அதிகாரியான பிரிகேடியர் ரோஜர் லேன் தெரிவித்தார்.

"எதிரிகளைப் பன்னாட்டுப் படையினர் எதிர்கொண்டனர் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியும். அந்த எதிரிகளில் 'சிலர் கொல்லப்பட்டுவிட்டனர்" - என்றார் ரோஜர். (ம)

## கடந்தவாரம் நடந்த சண்டையில் கொலம்பியாவில் 200பேர் பலி!

பொகோட்டா,மே19

கொலம்பியாவில் இடதுசாரித் தவிரவாதிகளுக்கும், படையினருக்கும் இடையில் கடந்த வாரத்தில் இடம்பெற்ற சண்டைகளில் 200பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் வடமேற்கில் அமைந்துள்ள அன்டியோகுய்யா மாநிலத்தில உள்ள கொலம்பிய விடுதலைப் படைத் தீவிரவாதிகளின் நிலைகளை அழிப்பதற்கு இராணுவம் கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஆரம்பித்த நடவடிக்கையின்போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

கம்பமென்டோ என்ற நகரில் அரச ஹெலிகள் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்திவருவதாகவும்- அங்கு சண்டை தொடர்வதாகவும் - அப்பகுதி கிறிஸ்தவ மதகுரு ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சண்டையில் உயிரிழந்தவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் தீவிரவாதிகளும், படையினருமே என்று கொலம்பிய அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)



இறந்தவர்களுக்காக சவப்பெட்டிகளை தயார் செய்யும் கொலம்பிய இராணுவத்தினர்

## எவரெஸ்டில் ஏறி 63 வயதான பெண் சாதனை!

டோக்கியோ,மே19

உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதில் ஜப்பானைச் சேர்ந்த 63 வயது மூதாட்டி ஒருவர் சாதனை படைத்துள்ளார். அவரின் பெயர் தமே வடனபி.

சுவிற்ஸர்லாந்து குழுவினருடன் சேர்ந்து இமயமலைச் சிகரத்தின் உச்சிக்குச் சென்ற இவர் தற்போது அங்கிருந்து திரும்பிக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் போலந்து நாட்டைச் சேர்ந்த 50 வயதுப் பெண் ஒருவரே எவரெஸ்டில் ஏறிய மிக வயதான மூதாட்டி என்ற பெருமையைப் பெற்றிருந்தார். அவரது சாதனையை தற்போது வடனபி முறியடிததுள்ளார். (ம)

### உலக அரங்கில்

## பொலீஸாரை அதிர வைத்த விபசார விடுதி

பாரிஸ்,மே19

நான்கு நாடுகளில் கிளைகள் அமைத்து விபசார விடுதிகளை நடத்தி வந்த பிரிட்டிஷ் பெண்மணியை பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

கேளிக்கைகளுக்குப் பெயர் பெற்ற பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் அனுமதியற்ற விபசார விடுதி நடத்தியதாக பிரிட்டனைச் சேர்ந்த மார்கிரெட் மக்டொனால்ட் என்ற பெண்ணைக் கைதுசெய்த பொலீஸார், அந்தப் பெண்ணிடம் இருந்த 'லப் ரொப்' கணனியை சோதனையிட்ட போது அதில் குறிப்பிடப்பட்டிருந்த தகவல்களைக் கண்டு மலைத்துப் போய் உள்ளனர். பிரான்ஸைத் தவிர இஸ்ரேல், தென்னாபிரிக்கா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் மார்கிரெட்டின் விபசார விடுதிக்குக் கிளைகள் இருந்ததும் -

பிரான்ஸில் மட்டும் சுமார் 450 அழகிகள், 30 கார்கள், அவற்றுக்கான சாரதிகள், நூற்றுக்கணக்கான உதவியாளர்கள் என்று இவரின் விடுதி செயற்பட்டதும் -

தெரியவந்துள்ளது.

தன்னை ஒரு தொழிலதிபராகக் காட்டிக்கொண்ட மார்கிரெட், பாதுகாப்புச் சேவை நிறுவனம் என்ற போர்வையில் இந்த விடுதியை நடத்தி வந்துள்ளார்.

கடந்த 10ஆண்டுகளில் பாரிஸில் இவ்வளவு பெரிய விபசார விடுதி கண்டுபிடிக்கப்பட்டமை இதுவே முதல் முறை எனக் கூறப்படுகிறது. (ஒ)

## ஆப்கானில் இராணுவப் படையை உருவாக்க உலக நாடுகள் உதவி

ஜெனீவா,மே19

ஆப்கானில் பாதுகாப்புப் படைகளைக் கட்டி எழுப்புவதற்கும் அதனுடன் தொடர்புடைய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பல லட்சம் டொலர் நிதி உதவிகளை வழங்குவதற்கும் ஜெனீவாவில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் 35 உதவி வழங்கும் நாடுகள் கலந்துகொண்டன. ஆப்கானுக்கான ஐ.நாவின் விசேட தூதுவர் லக்டர் பர்கிமி மற்றும் ஆப்கானிஸ்தானின் இடைக்கால நிர்வாகத்தில் வெளிவிவகார அமைச்சராக இருக்கும் அப்துல்லா அப்துல்லா ஆகியோர் கலந்துகொண்டனர். ஆப்கானில் இராணுவம், பொலீஸ் மற்றும் ஏனைய பாதுகாப்புப் படைகளை நிரந்தரமாக உருவாக்குவதற்கு உலக நாடுகள் உதவவேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

பல நாடுகள் எதிர்கால ஆப்கான் இராணுவத்துக்கு பயிற்சிகளையும், படையினருக்கான சம்பளத்தையும் மற்றும் இராணுவத் தளபாடங்கள் என்பவற்றையும் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தன. (ம)



மலர்களுடன் அணிநடை பயிலும் ஆப்கானின் தற்போதைய படையினர்.

## கருணைக் கொலை புரிய பெல்ஜியம் நாட்டில் அனுமதி

பிரசல்ஸ்,மே19

மீள முடியாத வியாதியால் பாதிக்கப்பட்டு வலியால் துடிக்கும் நோயாளிகளை சாக அனுமதிக்கும் சட்டம் பெல்ஜியம் நாட்டில் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. 'யுதனேசியா' என்று அழைக்கப்படும் கருணைக்கொலைச் சட்டத்தை ஏற்கனவே நெதர்லாந்து அரசாங்கம் உலகிலேயே முதலாவதாக கடந்த ஏப்ரல் மாதம் நிறைவேற்றியது. இப்போது 2ஆவதாக பெல்ஜியம் நாடாளுமன்றம் இந்த சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. சட்டத்துக்கு ஆதரவாக 86வாக்குகளும் எதிராக 51 வாக்குகளும் கிடைத்தன. 10பேர் வாக்களிக்கவில்லை. 3மாதத்தில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு கருணைக்கொலைக்காக ஒரு டாக்டர் மீது குற்றம் சாட்ட முடியாது. ஆனாலும் நோயாளி தீராத வியாதி உள்ளவராக இருக்க வேணடும். அதோடு கருணை கொலைக்கான முடிவை அவரே எடுத்திருக்க வேண்டும்.

கருணைக் கொலையை நிறைவேற்றுமுன், நோயாளியின் வயது, அவரது மனநிலை, அவர் சொந்த விருப்பத்தோடு இறக்க முன்வந்து இருக்கிறாரா என்பதை டாக்டர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

## பாக்.முன்னாள் பிரதமர்கள் நாடு திரும்புவதில் உறுதி

இஸ்லாமாபாத்,மே19

பாகிஸ்தானில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அதிபர் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாக முன்னாள் பிரதமர்களான நவாஸ் ஷெரீப் மற்றும் பெனாஸீர் பூட்டோ ஆகியோர் நாடு திரும்பவுள்ளனர்.

நவாஸ் ஷெரீப் மீது லஞ்ச ஊழல் மற்றும் தேசவிரோதக் குற்றங்களைச் சுமத்தி சிறையில் அடைத்த இராணுவ ஆட்சி பின்னர் அவரையும் குடும்பத்தினரையும் சவூதி அரேபியாவுக்கு நாடு கடத்தியது. அதேபோன்று பெனாஸீர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியது நவாஸ் ஷெரீப் அரசு.

இந்த நிலையில், லஞ்ச ஊழல் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பாகிஸ்தானுக்குள் பிரவேசித்தால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என பாகிஸ்தானிய அரசு அறிவித்துள்ளது.

ஆனால், இதனை நிராகரித்துவிட்டு நவாஸ் ஷெரீப்பும், பெனாஸீர் பூட்டோவும் தாம் நாடு திரும்பப் போவதாக தனித்தனியே அறிவித்துள்ளனர். (ஒ)

## கி.திமோர் கண்டனம்

சிலி,மே19

கிழக்குத் திமோர் சுதந்திர தினத்தையொட்டி அந்த நாட்டின் கடற்பிரதேசத்திற்கு இந்தோனேஷிய கடற்படைக் கப்பல்களை அதிபர் மேகவதி சுகர்னோ புத்திரி நகர்த்தியிருப்பது குறித்து கிழக்குத் திமோர் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

ஆனால் இந்தோனேஷிய அதிபர் மேகவதி கிழக்குத் திமோர் சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்துகொள்ள இருப்பதால், அவருக்குப் பாதுகாப்பு வழங்கும் நோக்குடனேயே போர்க் கப்பல்கள் கிழக்குத் திமோர் கடற்பரப்புக்கு நகர்த்தப்பட்டன என்று இந்தோனேஷிய நிர்வாகம் தெரிவிக்கின்றது.

"கப்பல்கள் எமது கடற்பரப்புக்கு நகர்த்தப்பட்டதால் நாம் கோபமடையவில்லை. ஆனால் எமது கண்டனத்தைத் தெரிவிக்கவும் நாங்கள் தயங்கப் போவதில்லை-" என்று கிழக்குத் திமோர் வெளிவிவகார அமைச்சர் ஜோஸ் ராமோஸ் தெரிவித்தார்.

இந்தோனேஷியாவிடம் இருந்து 1999ஆம் ஆண்டு கிழக்குத் திமோர் பிரிந்து சென்ற பின்னர் அங்கு அரசு முறையில் சுதந்திரதினம் கொண்டாடப்படுவது இதுவே முதற்றடவை. இந்தச் சமயத்தில் மேகவதியின் பாதுகாப்பைக் காரணம்காட்டி இந்தோனேஷியா தனது 6 போர்க் கப்பல்களை கி.திமோர் கடற்பரப்புக்கு நர்த்தியுள்ளது. (ம)



சுதந்திர தினத்துக்கான ஒத்திகையில் ஈடுபட்டிருக்கும் கிழக்குத் திமோர் பாண்ட் வாத்தியக் குழுவினர். அவர்களுக்கு முன்பாகத் தெரிவது அந்த நாட்டின் தேசியக் கொடி.

# மாடுகளைத் துன்புறுத்தியதாக பன்னிரண்டு பேருக்கு அபராதம்!

## சாவகச்சேரி நீதிமன்றம் விதித்தது

தென்மராட்சி,மே19

மாடுகளை மிகவும் நெருக்கமாக வாகனங்களில் ஏற்றி வந்த 12 பேருக்கு நீதிமன்றத்தால் தலா 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை முகமாலை ஊடாக வந்த இரு வாகனங்களில் அளவுக்கு அதிகமாக மாடுகள் ஏற்றி வரப்பட்டதை அவதானித்த பொலீஸார் அவ்வாறு ஏற்றி வந்தவர்களைக் கைதுசெய்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

அவர்களை விசாரித்த பதில் நீதிவான், மாடுகளை சித்திரவதைப் படுததும் முறையில் வாகனத்தில் ஏற்றிச் சென்றமைக்காக மிருக வதைத் தடுப்புச்சட்டத்தின் கீழ் தலா 500 ரூபா அபராதம் விதித்தார்.

அத்துடன் ஒரு வாகனத்தில் அதிக எண்ணிக்கையான கால் நடைகளை ஏற்றி, அவற்றைத் துன்புறுத்தக் கூடாது என்றும் நீதிவான் அவர்களை எச்சரித்தார். (ஒ-117)

### விண்ணப்ப திகதி நீடிப்பு

கொழும்பு,மே19

அரச சேவையிலுள்ள எழுதுநர் சேவைக்கும் அதனோடிணைந்த சேவைகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் திகதி இம் மாதம் 24ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், நீதித்துறை எழுதுநர் சேவை மற்றும் புகையிரத நிலைய அதிபர் வகுப்பு IIஇன் பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் சகல பாடங்களும் ஒரே அமர்வில் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### நல்லை ஆதீனத்துக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மே19

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம், நல்லை திருஞானசம்பந்த ஆதீனத்தின் கருத்தரங்கு மண்டபத்திற்குரிய தளபாடங்களை அன்பளிப்பாக வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆதீனத்தில் இடம்பெறுகிறது. (ஒ)

### பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம் சாவகச்சேரியில்

தென்மராட்சி,மே19

இடம்பெயர்வின் பின்னர் அச்சுவேலியில் இயங்கிவந்த சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத் திச் சங்கத் தலைமையலுவலகம் மீண்டும் சாவகச்சேரியில் இயங்கத் தொடங்கியுள்ளது.

தற்போது தென்மராட்சி பிரதேச செயலகம் செயற்பட்டு வரும் கட்டடத்திற்கு அருகில் தலைமை அலுவலகம் இயங்குவதாக சங்கப் பொது முகாமையாளர் வே.கிருஷ்ணன் தெரிவித்தார்.

மீளக் குடியமர்ந்து தொழிலில் ஈடுபடும் அங்கத்தவர்கள் அருகில் உள்ள தவறணைக்கு கள்ளை வழங்குமாறு அவர் தெரிவித்தார். (ஓ-117)

### தரைப்பாதை வழியாக முத்திரைகள்

யாழ்ப்பாணம்,மே19

கடந்த பல வருடங்களின் பின்பு குடாநாட்டின் தபாலகங்களுக்கென ஏ-9 தரைவழிப் பாதையூடாக முதற்றடவையாக ஒரு தொகுதி முத்திரைகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து தபால் திணைக்களத்தின் வாகனத்தில் எடுத்துவரப்பட்ட முத்திரைகள் யாழ். பிரதம தபாலகம் உட்பட 6 தபாலகங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பிரதம தபாலதிபர் எஸ்.ஞானசீலன் தெரிவித்துள்ளார்.

இதனால் குடாநாட்டில் ஒரு ரூபா முத்திரைக்கு இருந்துவந்த தட்டுப்பாடு நீங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான புகையிரத சேவை இடம்பெற்றுவந்த காலத்தில் புகையிரதம் மூலம் எடுத்துவரப்பட்ட முத்திரைகள் புகையிரத சேவை தடைப்பட்ட காலத்தில் இருந்து இற்றைவரை விமான மூலம் எடுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

### பளை தபால் நிலையம் விரைவில் சொந்த இடத்தில்

யாழ்ப்பாணம்,மே19

பளை தபால் நிலையத்தை மீண்டும் சொந்த இடத்தில் இயங்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தபால் நிலையம் இயங்கத் தொடங்கியதும் இதன் நிர்வாகத்தின் கீழுள்ள உப தபால் நிலையங்களும் அவற்றின் சொந்த இடங்களிலேயே இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது பளை தபால் நிலையமும் இதன் கீழ் இயங்கும் உப தபால் நிலையங்களும் வடமராட்சிப் பகுதியில் இயங்கி வருகின்றன. (ஓ-173)

## பருத்தித்துறை நகராட்சி மன்றம் மீள் கேள்வி அறிவித்தல்

### ஆட்டிறைச்சிக் கடை

2002.06.01 தொடக்கம் 2002.12.31 வரையிலான காலப்பகுதிக்கு பருத்தித்துறை மீன் சந்தையிலமைந்துள்ள ஆட்டிறைச்சிக் கடையை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி 2002.05.29ஆம் திகதி நண்பகல் 12.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். 2002.05.24ஆம் திகதி பிற்பகல் 3.30 மணி வரை கேள்வி விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

அட்டவணை

| கேள்வி விவரம் | நிர்ணயித்த தொகை | மீளளிக்கப்படக் கூடிய பிணைப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | ப.செ வரி |
|---|---|---|---|---|
| ஆட்டிறைச்சிக் கடை | 33,310.00 | 1,000.00 | 250.00 | 31.25 |

தமது கேள்வித் தொகையின் 12.5% தொகை பண்டங்கள் சேவைகள் வரியாக மேலதிகமாகச் செலுத்தப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**ந.சிவபாலதருமகுலசிங்கம்**
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

(C/22186)

**நா.மணிவண்ணன்**
உப தலைவர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.


# Canadian College of Business & Computers.

Offers
$4 Million
in Scholarships
to study in Canada



The Canadian College of Business & Computers is investing over 4 Million Dollars to build the foundation of human development and PEACE. CCBC has decided to offer Scholarships to Sri Lankan students because we are convinced that they will contribute, in the near future, to strengthen Canada's growing influence in Sri-Lanka. CCBC is pleased to expose young Sri Lankans to a peaceful nation like Canada.

This program is targeted towards all Sri Lankans who have demonstrated plans for higher education. You will undergo a 2 Hour aptitude test followed by an extensive interview conducted by CCBC principals at the BMICH.

To be eligible for Scholarship and Admission you will have to score 75% and 60% respectively. Scholarships will be awarded based on aptitude score, previous academic achievement and evidence of social and community participation.

**Aptitude Test**

Date: June 1st and 3rd
Time: 10:00 am to 4:00 pm

**Interview**

Date: June 4th, 5th and 6th
Time: 10:00 am to 4:00 pm

**Scholarships will be awarded as follows:**

5 Awards of Full Tuition CDN $ 19,000 each.
10 Awards of Partial Tuition CDN $ 17,000 each.
10 Awards of Partial Tuition CDN $ 13,000 each.
80 Awards of Partial Tuition CDN $ 11,000 each.
155 Awards of Partial Tuition CDN $ 9,000 each.
200 Awards of Partial Tuition CDN $ 7,000 each.

The deadline for receipt of completed applications is May 31st, 2002. Please ensure you submit the following documents along with your application to the following address

Scholarship Application & Admission
24 Temple Lane
Colombo 3
Sri Lanka
phone: 507.176

**Scholarship Application Requirements:**

1. School Character Certificate
2. Police Clearance Report
3. Copy of your Passport
4. Copy of your Birth Certificate
5. Copy of your Educational Certificates / Transcripts
6. Employment Letter, if any
7. Proof of sufficient funds for living expenses for two years - ( US $ 10,000) and tuition payment ranging from US $ 1,500 to US $ 8,000 depending on the scholarship award you would receive.
8. Fee of US $13 by Demand Draft in favor of "Canadian College of Business & Computers"

Ready for the challenge? Welcome to Canada for your studies.

WWW.CCBC.CA

eSTUDIES

Contact Persons: Meena or Violeta
INTERNATIONAL ADMISSIONS OFFICE
phone: 1-416-413-1234
fax: 1-416-413-0314
e-mail: admin@ccbc.ca
Call During 8:00pm - 5:00am Sri Lanka Time

"Education is the foundation of Human Development, Security and PEACE"

உதயன்

## சமாதானம் வெறும் கனவாகி விடுமா?

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே திட்டமிடப்பட்டபடி அடுத்த மாதம (sic) தாய்லாந்தில் முதல் கட்டப் பேச்சுக்கள் நடக்குமா? என்ற கேள்வி எங்கும் எழுப்பப்படுகிறது.

அந்த அளவுக்குச் சமாதான முன்னெடுப்புகளில் தொய்வும், பின்னடைவும் காணப்படுகின்றன. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு வலுவடைந்தும், விரிவடைந்தும் வருகிறது.

கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சிகளின் முதலாவது எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நுகேகொடையில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடந்தன. பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதோடு, பல்வேறு கோஷங்களோடு 'நாட்டைப் பிரிக்கக்கூடாது' என்றும், 'நாட்டின ஒரு பகுதியை பிரபாகரனிடம் கையளிக்கக்கூடாது' என்றும் கோஷம் எழுப்பினார்கள்.

வாழ்க்கைச் செலவு உயர்வு, அடக்குமுறை, நாட்டுப் பிரிவினை இவற்றை எதிர்த்துத்தான் ஆர்ப்பாட்ட ஊர்வலமும், கூட்டமும் நடத்தப்பட்டன. என்றாலும் அரசின் சமாதான முன்னெடுப்புக்கான எதிர்ப்புத்தான் மேலோங்கி நின்றது.

இதைப்போல இன்னும் நூறு கூட்டங்களை நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் நடத்தி அரசை மக்கள் முன் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி ஆட்சியை சமாதான முறையில் கைப்பற்றப்போவதாகக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசிய மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

அதேவேளை, சமாதான முயற்சிக்கு ஆதரவு திரட்டுவதற்காக எதிர்க்கட்சிகள் உட்பட நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுடனும் கூட்டாகப் பேசப்போவதாகப் பிரதமர் அறிவித்திருக்கிறார்.

ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று சூளுரைப்பவர்கள் பிரதமரின் சந்திப்போடு சமாதான் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்க முன்வந்தால் அது நாடு செய்த புண்ணியம் என்றே கொள்ளவேண்டும்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு ஒருபுறம் இருக்க அரசப் படைத்தரப்புகளில் கூடச் சமாதான முன்னெடுப்புகளுக்கு முற்றுமுழுதான ஆதரவு இல்லை.

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளும் யுத்தநிறுத்த மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கேலிக்கூத்தாக்கி வருகின்றன.

இதைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். கடந்த காலங்களில் சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடைந்ததற்குப் படையினரின் செயற்பாடும் முக்கிய காரணமாக அமைந்தது. 'படையினர் யுத்தநிறுத்த மீறல் சம்பவங்களைத் தவிர்த்துக்கொள்வதைப் பிரதமர் உறுதிசெய்ய வேண்டும்' என்றும் தமிழ்ச் செல்வன் ஆலோசனை கூறியிருக்கிறார்.

'சமாதான முன்னெடுப்புகளில் பிரதமருக்கு ஆரம்பத்தில் இருந்த வேகம் இப்போது இல்லை; தேக்க நிலை காணப்படுகிறது. புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எத்தனையோ விடயங்கள் காலங்கடந்தும் இன்னும் செய்துமுடிக்கப்படவில்லை. புலிகள் மீதான தடை நீக்கப்படவில்லை. இவற்றால் பேச்சுவார்த்தை நடக்குமா என்று மக்கள் சந்தேகிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது' என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் சமீப காலத்தில் வெளியிட்டுவரும் கருத்துக்களும், பொதுமக்களை அவர் மீது சந்தேகம் கொள்ள வைக்கின்றது.

அரசு நினைத்தவுடன் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தமுடியாது எனவும், அதற்கு எத்தனையோ சட்டமுறைகள் இருக்கின்றன என்றும் நழுவல் பாணியில் பிரதமர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தமிழ் மக்களின் தாயகக் கொள்கையைத் தம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் பிரதமர் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார்.

இதுதான் பிரதமரின் உண்மையான நிலைப்பாடு என்றால், பேச்சு திட்டமிட்டபடி அல்லாமல் காலங் கடந்தேனும் நடந்தாலும்கூட என்ன பலன் ஏற்படப் போகிறது?

மொத்தத்தில் யுத்தநிறுத்தம், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு, நிரந்தர சமாதானம் எல்லாம் வெறும் கனவாகிவிடுமோ என்ற சந்தேகமே பலருக்கும் எழுகின்றது.

# பயங்கரவாதச் சட்டம் செல்லுபடியற்றது?

## 20 வருடங்களின் பின் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு,மே19

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் செல்லுபடியற்றது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டம் அரசியலமைப்பு விதிப்படி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படவில்லை. 20 வருடங்களின் பின்னர் இப்போது விடயத்தைத் துருவி ஆராய்ந்து உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறார் தமிழ்க் காங்கிரஸ் எம்.பி.அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 3 வருடங்கள் மட்டும் அமுலில் இருப்பதற்கென்று தற்காலிகச் சட்டமாக 1979இல் கொண்டுவரப்பட்டது.

மூன்று வருட முடிவில் இந்தச் சட்டத்துக்கு உயிர் கொடுத்து அதை நிரந்தரமாக நடைமுறையில் இருக்கச் செய்வதற்கு சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இது நடந்தது 1982ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி ஆகும். மேற்படி திகதியில் நாடாளுமன்றத்தில் 196 உறுப்பினர்கள் இருந்தார்கள். சட்டத்திருத்தம் வாக்களிப்பிற்கு விடப்பட்டபோது 127 பேர் மட்டுமே ஆதரவாக வாக்களித்தார்கள்.

சபாநாயகர் வாக்களிப்பின் பின் சபையில் செய்த அறிவிப்பில் சட்டத் திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

127 வாக்குகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையாகாது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற 130பேராவது வாக்களித்திருக்கவேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை.

இது சம்பந்தமான விவரங்கள் 1982ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதிய நாடாளுமன்றப் பதிவேட்டில் தெளிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. வாக்களிப்பு விவரம் பற்றி நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கேள்வி எழுப்பியிருக்கிறார்.

சட்டத்திருத்தத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் வாக்களித்தவர்கள் பற்றி தமக்கு அறியத்தருமாறு அவர் எழுத்தில் கேட்டிருக்கிறார்.

தற்போது திருத்தப்பட்ட நிலையில் அமுலில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் செல்லாது என்று அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆராய்ந்து கண்டுபிடித்துக் கூறுவது ஏற்றுக் கொள்ளப்படுமானால் அது சட்டத்துறையையும் நீதித்துறையையும் ஒரு கலக்குக் கலக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறைகளில் வருடக்கணக்காக விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் அனைவரையும் உடனே விடுதலை செய்யவேண்டும். இனிமேல் எவரையும் அந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யமுடியாது.

செல்லாத சட்டத்தை நடைமுறைப்படுத்தி எத்தனையோ பேரைக் கஷ்டத்துக்கும் துன்பங்களுக்கும் உள்ளாக்கியதற்கு சட்டத்துறையும் நீதி நிர்வாகத்துறையும் பதில் சொல்லி ஆகவேண்டும். (ம)

### 52 நாள்களாகத் தொடர்ந்த

## 'லங்கா சிமெந்து' தொழிலாளரின் மறியல் போராட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மே19

5 கோரிக்கைகளை முன்வைத்து, லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் கைத்தொழிலாளர் பொதுத் தொழிலாளர் சங்கத்தினர் மேற்படி நிறுவன இணுவில் காரியாலயத்தின் முன்பாக 52 நாள்களாக மேற்கொண்டிருந்த மறியற்போராட்டம் கடந்த வியாழக்கிழமை இடைநிறுத்தப்பட்டதாகத் தொழிலாளர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

லங்கா சிமெந்து லிமிடெட் தொழிலாளராகிய நாம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து மார்ச் மாதம் 26ஆம் திகதியில் இருந்து தொடர்ந்து 52 நாட்களாக லங்கா சிமெந்து லிமிடெட்டின் இணுவில் காரியாலயம் முன்பாக மறியல்போராட்டத்தில் ஈடுபட்டு வந்தோம். தொடர்ந்து நடைபெற்ற எமது போராட்டம் வடபகுதியில் உள்ள பல தொழிற்சாலைகளினதும், பொது அமைப்புக்களினதும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அவர்களின் அனுதாபத்தையும், ஆதரவையும் பெற்றிருந்ததன். இதன் பிரதிபலிப்பாக சுயவிருப்பத்தில் ஓய்வுபெறும் திட்டத்திற்கு விண்ணப்பிக்காத தொழிலாளருக்கு லங்கா சிமெந்து லிமிடெட் காரியாலயம் இணுவிலில் வரவுப்பதிவேட்டில் கையொப்பம் இடுவதற்கான அனுமதி பெறப்பட்டது. மேற்படி நடவடிக்கையானது தொழிற்சாலைத் தலைவர் திரு. அணில்கொஸ்வத்தயையும் பகுதிப் பொறுப்பதிகாரி தி.இ.செல்வநாயகத்துக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் காரியாலயத்தில் அவரதும் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளதும் முன்னிலையில் தொலைபேசி ஊடாகப் பணிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் இணுவில் காரியாலயத்தில் வரவுப் பதிவேட்டில் கையொப்பம் இட்டனர்.

மிகுதிக் கோரிக்கைகள் பதில் தொழில் ஆணையாளரின் விளக்கத்திற்கிருப்பதால் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதென தொழிற்சங்கம் முடிவெடுத்துள்ளது. மேற்படி எமது தொழிற் சங்க அங்கத்தவர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்கும் மன உறுதியும், போராட்ட உணர்வுமே எமக்கு இப்பெறுபேற்றைத் தந்துள்ளது.

எமது போராட்டம் சார்பாக பல வழிகளிலும் ஆதரவு தந்த அனைவருக்கும் எமது தொழிற்சங்கம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### அடுத்த மாதம் முதலாம் திகதி

## மாவட்ட அரசு தகவல் பிரிவு யாழ்.செயலகத்தில் திறப்பு

யாழ்ப்பாணம்,மே19

அரசாங்கம் தகவல் திணைக்களத்தின் யாழ்.மாவட்டத் தகவற் பிரிவு அலுவலகத்தை எதிர்வரும் முதலாம் திகதி மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் யாழ்.செயலகத்தில் திறந்துவைக்கவிருக்கின்றார்.

தொலைபேசி, பக்ஸ், ஈமெயில், கணனி ஆகிய தொழில்நுட்ப வசதிகளுடன் இந்த அலுவலகம் செயற்படுமென்றும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் பத்திரிகையாளர்கள் தேவையான தகவல்களை இந்தப் பிரிவில் பெறமுடியும் என்றும் -

தகவல் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க தெரிவித்தார். (ம-3)

**நாளை**

வைகாசி 06
திங்கட்கிழமை
(20.05.2002)
திதி : அட்டமி
முற்பகல் 9.34 வரை.
நட்சத்திரம்: மகம்
பிற்பகல் 1.17 வரை.
சுபநேரம் : 11.52 - 1.22
ராகுகாலம்: 7.22 - 8.52
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

ஆசைகளுக்கும், தேவைகளுக்கும் அடிமையானவன் பாவம் செய்யத் தயங்குவதில்லை.

### குடாநாட்டில் இருந்து

## சுற்றுலா செல்லும் மாணவர் வன்னிக்கும் வரவேண்டும்

### அங்குள்ள அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே19

யாழ்.குடாநாட்டில் இருந்து தென்பகுதிக்கு கல்விச் சுற்றுலா உட்பட சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வோர் தென்பகுதியுடன் நின்றுவிடாது வன்னிப் பகுதிக்கும் வந்து அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிடவேண்டும் என வன்னியில் உள்ள பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

தற்போது ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்டதையடுத்து மாணவர்கள் உட்பட பலரும் தென்பகுதிக்குச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர். இந்தப் பயணங்கள் பெரும்பாலும் பொழுது போக்கையும், பௌத்த வரலாற்றுச் சின்னங்களைப் பார்வையிடுவதுடன் முடிந்துவிடுவதாகவும் - அவ்வாறு இல்லாமல் அந்தச் சுற்றுலாக்கள் பயனுள்ளதாக அமையவேண்டுமெனில் வன்னிப் பிரதேசத்துக்கும் அவர்கள் வந்துசெல்லவேண்டும் என்றும் - வன்னிப பொது அமைப்புகள் கோரியுள்ளன.

'வன்னி மண்ணில் மாணவர்கள் பார்க்க வேண்டிய பல புராதன சான்றுகள் உள்ளன. அத்துடன் வன்னி மண் கடந்த காலத் தமிழர் பெருமையை பறைசாற்றி நிற்கும் பூமி. அந்தகைய இடங்களை தமிழ் மாணவர்கள் பார்க்க வேண்டியது அவசியமாகும். இதுவே எமது விருப்பம்.

- இவ்வாறு பொது அமைப்புகள் தெரிவித்தன.

## வாகன நெரிசலால் விபத்துகள் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்,மே19

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ள வாகன நெரிசலால் வீதி விபத்துக்களும் அதிகரித்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின் வெளி மாவட்டங்களிலிருந்து தினமும் அதிக எண்ணிக்கையிலான வாகனங்களில் மக்கள் வந்து செல்வதாலும் -

இங்குள்ளவர்கள் தினமும் தென் பகுதியிலிருந்து வாகனங்களைக் கொள்வனவு செய்துகொண்டு வருவதனாலும் -

வீதிகளில் வாகன நெரிசல் அதிகரித்துள்ளது. இதனால் விபத்துக்களும் 'அடிக்கடி இடம்பெறுகின்றன.

சென்ற மாதம் மட்டும் வீதி விபத்துக்களில் 30 பேருக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளதாகவும் -

பல வாகனங்கள் சுவர்கள், மின்சாரக் கம்பங்கள் போன்றவற்றில் மோதிச் சேதமான சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகவும் - கூறப்படுகிறது.

இந்த விபத்துக்கள் சிலவற்றில் உயிரிழப்புகளும் நேர்ந்துள்ளன.

தற்போது முக்கிய சந்திகளில் பொலீஸாரோ, பொது அமைப்பைச் சேர்ந்தவர்களோ போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் சேவையில் ஈடுபடாமல் இருப்பதும் வீதி விபத்துக்கள் அதிகரித்திருப்பதற்கு ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

கடந்த மாதம் மட்டும் பல மோட்டார் சைக்கிள்கள் யாழ். மாவட்டத்திற்கு தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-12)

## பின்தங்கிய பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு விசேட சலுகைகள்

கொழும்பு,மே19

பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு விசேட சலுகைகள் அறிமுகப்படுத்தப்பட விருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

இதற்கமைய பின்தங்கிய பகுதிகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இரட்டைச் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது. அத்துடன் பதவி உயர்வுகள் மற்றும் ஏனைய சலுகைகளிலும் இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

பின்தங்கிய பிரதேசங்களில் கல்வித்தரத்தை மேம்படுத்தும் முகமாக, அங்கு போதிய ஆசிரியர்கள் பணியாற்றும் வகையிலேயே இந்த நடவடிக்கையை அரசு எடுத்துள்ளது. (ஒ)

## பாம்புக்கடிக்கு இலக்கானார்

பளை, முகமாலை பகுதியில் உள்ள வீட்டில் மீளக் குடியமர்வதற்காக துப்புரவு வேலையில் ஈடுபட்ட சின்னத்தம்பி சிவராசா (வயது 40) பாம்பினால் கடியுண்டார். பாம்பினால் கடியுண்ட இவர் சைக்கிளில் முகமாலை வரை அயலவர்களால் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து வாகனமொன்றில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டார். (ஓ-117)

## இருவர் காயம்

இராணுவ டிரக் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இருவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இடம்பெற்ற இவ்விபத்தில் ஊரெழுவைச் சேர்ந்த த.சுபாஸ்குலன் (வயது 21), மட்டுவிலைச் சேர்ந்த ப.ஜெயக்குமார் (வயது 27) ஆகியோரே படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர் ஆவர். (ஓ-12)

# கைதடியில் உயிரிழந்த புலிகளுக்கு நினைவஞ்சலி

கைதடி,மே19

கைதடிப் பகுதியில் 1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற தவறுதலான வெடி விபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்.கேணல் பொன்னம்மான் உட்பட 10 மாவீரர்களினதும் அச்சம்பவத்தில் மரணித்த பொதுமக்களினதும் 15ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கிராம அலுவலர் சு.செல்வராஜா தலைமையில் கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈகச்சுடரை தளபதி வீமன் ஏற்றினார்.

இந்நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப புலிகளின் பிரமுகர் அன்பு மகளிர் பிரிவைச் சேர்ந்த கீதா ஆகியோர் உரையாற்றினர். 'தேசத்தின் புயல்கள்', 'உறங்காத கண்மணிகள்' ஆகிய வீடியோ படங்களும் அங்கு காண்பிக்கப்பட்டன. (க-13-ரி)

## இயந்திர உபகரண நிறுவனக் கிளை வன்னியில்

வவுனியா,மே19

கடந்த 12 ஆண்டுகளாக அபிவிருத்தி செய்யப்படாதிருந்த வன்னிப் பெருநிலப் பரப்பில் அபிவிருத்திப் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப் படவிருக்கின்றன. இதற்கென கிளிநொச்சியில் எதிர்வரும் வாரத்தில் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தின் கிளை ஒன்று திறக்கப்படவிருக்கிறது.

நேற்றுமுன்தினம் வவுனியா செயலகத்தில் இது தொடர்பாக தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகளுக்கும் தேசிய இயந்திர உபகரண நிறுவன அதிகாரிகளுக்கும் இடையே கூட்டம் ஒன்று நடைபெற்றது. (ஒ)

# அஞ்சல்துறை அதிகாரிகள் மாற்றம்

கடந்த இரண்டு வருடங்களாக யாழ். பிரதம தபாலதிபராகக் கடமையாற்றிவந்த எஸ்.மார்க்கண்டன் தபால் திணைக்களத்தின் யாழ். பிரதேச நிர்வாக அதிகாரியாகக் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் பொறுப்பேற்றுள்ளார்.

இதுவரை பிரதிப் பிரதம தபாலதிபராகக் கடமையாற்றிவந்த எஸ்.ஞானசீலன் பிரதம தபாலதிபராகக் கடமையேற்றுள்ளார்.

இதேவேளை வவுனியா பிரதம தபாலதிபராகக் கடமையாற்றிவந்த எஸ். சிவராசசிங்கம் யாழ்.பிரதேச அஞ்சல் அத்தியட்சகராகவும் கடமையைப பொறுப்பேற்றுள்ளார். (ஒ-10-13-ரி)

# கோப்பாயில் திருடர் கைவரிசை!

கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த இராணுவமுகாம் அண்மையில் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டதை அடுத்து முகாம் இருந்த வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றனர்.

இதனால் வீட்டில் உள்ள மரங்கள், கதவுகள் அகற்றப்பட்டு வருவதுடன் மதில்கள் உடைக்கப்பட்டு கற்கள் மற்றும் வீடுகளில் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் ஓடுகள் என்பவற்றை வாகனங்கள் மூலம் திருடர்கள் ஏற்றிச்செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இதுவிடயம் தொடர்பாக அருகில உள்ள பொலீஸாரோ அல்லது அப்பகுதிக் கிராம அலுவலரோ உரிய நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ஒ-10)


**Ceylinco Insurance Company Limited**

Ceylinco Life Centre, 134, Galle Road,
P.O.Box 899, Colombo - 3, Sri Lanka.
Tel: 438294-5, 424812-5
Telegrams: CEYLINCO Fax: (94-1) 437613
Website: www.ceylife.lk

**சிலிங்கோ**

**இன்சூரன்ஸ் கம்பனி (ஆயுள்)**

இப்பொழுது யாழ்.மண்ணில்
இலக்கம் 560, ஆஸ்பத்திரி வீதி,
செலான் வங்கி கட்டடம்,
யாழ்ப்பாணம்.

இலங்கை காப்புறுதி வரலாற்றில் முதன்முறையாக 10 மடங்கு காப்புறுதியை வழங்குபவர்கள்.

இப்பொழுதே உங்கள் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

எங்கள் அலுவலகம் சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும். (C/22161)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
04 - 03 - 1916



இறப்பு
19 - 05 - 2001

**திருமதி கந்தையா அன்னம்மா**

திதி:- 07-06-2002

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனை வேண்டுகின்றோம்.

*"கைலையங்கிரி",*
*மீசாலை.*
*தற்காலிக முகவரி:*
*மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.*

இவரது பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(3872)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27 - 12 - 1924



மறைவு
28 - 05 - 2001

**தம்பிப்பிள்ளை இராசையா**

*திதி: ஸப்தமி*

பார்போற்ற எம்வாழ்வு துலக்கிப்
புகழோடு வைத்துநீ போனாய்!
ஆர்வந்து போனாலும் உமைப் போல்
ஆதாரம் எமக்காருண்டு ஐயா!
நீர் பிரிந்து போனாலும் நாளும்
நினைவு தாங்கி யிங்கு
ஓராண்டு சென்றாலும் எம் விழிகள்
ஓயாமல் கண்ணீர் வடிக்கிறதே!

நிரந்தர முகவரி:
*27, 3ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை.*
தற்காலிக முகவரி:
*நவாலி, மானிப்பாய்.*

*பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

(3873)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

செல்வி

**விஜிதா யோகநாதன்**

தோற்றம்
17.12-1975

மறைவு
19.04.2002

அன்போடும் பண்போடும் எம்முடன் வாழ்ந்தீர்!
எந்நாளும் உம் நினைவு எம் மனதை விட்டு அகலாது!!
ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

எமது இல்லத்தில் நடைபெறுகின்ற சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

*127, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகப்பன், தாய்,
சகோதரன். (3879)

## உதிர்ந்த மலர்களின் உதிரா நினைவலைகள்

### ஓர் திங்கள் அகல்வும், 17ஆம் ஆண்டு நினைவழைப்பும் நன்றி நவிலலும்

"விசுவாசிகளின் வாழ்வு மாறுபடுவதே அன்றி அழிக்கப்படுவதில்லை"

இறை அன்பு
1911 ☆ 06 ☆ 03



இறை சித்தம்
1985 ☆ 01 ☆ 05

இறை அன்பு
1925 ☆ 11 ☆ 25



இறை சித்தம்
2002 ☆ 04 ☆ 19

**அமரா தாவீது சவரிமுத்து** **திருமதி சவரிமுத்து செபமாலை**

ஆயிரம் உறவில் அர்த்தங்கள் இல்லை
அன்னை தந்தையே அன்பின் எல்லை
ஆலயம் அன்பு அறிவின் முகவரி - நீங்களென
அறிந்தே அழுகின்றோம் அறுவர் உம்மக்கள்
அளிப்பீர் ஓர்வரம் உங்கள் திருவதனம்
ஒரு முறை கண்டு மகிழவே!

எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து உடன் வந்து எமக்கு உதவிய அன்புள்ளம் கொண்டவர்க்கும் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காக ஜெபித்த அனைவர்க்கும் எமது இதய நிறைவின் நன்றிகளைக் கூறிநிற்கும் வேளை இன்று (19.05.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்தித் திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து எமதில்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இறப்பியேல் அருமநாயகம்*
*ஐயனார் வீதி,*
*சுன்னாகம்.*

*பிரிவால் துயருறும்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(3880)

# உங்கள் செல்வங்களை உற்று அவதானியுங்கள்...!

ஒரு குழந்தை பிறந்ததில் இருந்து பெரியவனாகும் வரை தனது உடலிலும் உள்ளத்திலும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாகக் குழந்தையின் மூளை விருத்தியின் பெரும்பாகம் 5 வயதுக் குள்ளேயே ஏற்படுகின்றது. குழந்தை குறிப்பிட்டகால எல்லைக்குள் அவ் வளர்ச்சியை அடையவேண்டும். அவ்வாறு ஒரு குழந்தை குறித்த கால எல்லைக்குள் அவ்வளர்ச்சியை அடையாவிட்டால் அக்குழந்தை ஏதாவது உடல் அசாதாரணங்களைக் கொண்டிருக்கலாம். உதாரணத்திற்கு, ஒரு குழந்தை அதன் 18ஆம் மாதம் வரையில் கருத்துள்ள ஒரு சொல்லையேனும் உச்சரிக்காவிட்டால் (கதைக்காவிட்டால்) அக்குழந்தையின் செவிப் புலனில் ஏதாவது குறைபாடு இருக்க

ரி.தர்ஷினி
4ஆம் வருடம்,
மருத்துவபீடம்

லாம்.

சில குறைபாடுகளை அல்லது நோய்களை ஆரம்ப நிலையில் கண்டறிவதினால் குழந்தையின் வளர்ச்சியில் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுக்கலாம் அல்லது குறைக்கலாம்.

குழந்தையின் வளர்ச்சியில் பரம்பரை அலகும் சூழலும் முக்கிய பங்கை வகிக்கின்றன. குழந்தையின் தேவைகள் உடல் வளர்ச்சி சம்பந்தப்பட்டதாகவோ, உளவளர்ச்சி சம்பந்தப்பட்டதாகவோ இருக்கலாம். ஒரு குழந்தையின் வளர்ச்சியில் ஏற்படும் தாமதத்தின் மூலம் நாம் அத்தாமதத்திற்கான காரணத்தை அறிந்து கொள்ளலாம். உதாரணமாக மூளையில் ஏற்படும் அசாதாரணங்களும் நோய்களும் குழந்தையின் உடல், உள வளர்ச்சியைப் பாதிக்கும்.

### குழந்தையின் வளர்ச்சிப் படிநிலைகளை பின்வருமாறு வகுக்கலாம்

1. பிறந்து 6 கிழமைக்குள்.
2. 6 - 8 கிழமைகள்.
3. 6 - 9 மாதங்கள்.
4. 18 - 24 மாதங்கள்.
5. 3 - 4 வருடங்கள்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு காலப் பகுதியிலும் குழந்தை ஒவ்வொரு வளர்ச்சிப் படிநிலைகளை அடைகின்றது. வளர்ச்சி, செயற்பாடுகள், குழந்தைக்கு குழந்தை வேறுபடும். ஆனால், இச்செயற்பாடுகள் ஒரு குறிப்பிட்டகால எல்லைக்குள் நிகழ்ந்துவிடும். உதாரணமாக, ஒரு குழந்தை 18 மாதங்களிற்குள் நடக்க ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் அக்குழந்தை ஏதோ குறைபாடுள்ள குழந்தையாக இருக்கும்.

அடுத்து ஒவ்வொரு காலப்பகுதியிலும் குழந்தையில் ஏற்படும் உள, உடல், வளர்ச்சிகள் தரப்பட்டுள்ளன.

### பிறந்து 6 கிழமையில் நடைபெறும் வளர்ச்சிகள்

1. குழந்தை நிமிர்ந்து தரையில் படுத்திருக்கும்.
2. குழந்தையின் நான்கு அவையவங்களும் புவியீர்ப்பிற்கு எதிராகச் சமச்சீராக அசையும் திறனைப் பெற்றிருக்கும்.
3. தசை நார் வலு சாதாரணமாக இருக்கும்.
4. குழந்தை அழுவதற்கான சக்தியைப் பெற்றிருக்கும்.
5. குழந்தையை யாராவது தூக்கும் போது அதற்கான பிரதிபலிப்பைக் காட்டும்.
6. குழந்தை தானாக சிலவகை ஒலிகளை எழுப்பும் சக்தியைப் பெற்றிருக்கும்.
7. குழந்தை ஒளிக்கு உணர்வைக் காட்டும் திறனைக் கொண்டிருக்கும்.

### 6 - 8 கிழமை

*(உடம்பு பிரட்டும் குழந்தை)*

1. குழந்தையின் நான்கு அவையவங்களும் சமச்சீரான அசைவுகளைக காட்டும்.
2. தசை நார்களின் வலு சாதாரணமாக இருக்கும்.
3. குழந்தையின் கண்கள் ஒரு பொருளின் அசைவைப் பின்தொடரும் அளவிற்கு சக்தி பெற்றிருக்கும்.
4. கண்ணில் வாக்கோ அல்லது சுயாதீன அசைவோ இருக்காது. (6கிழமை)

### 6-9 மாதம்

*(அமரக்கூடிய பிள்ளை)*

1. குழந்தை துணையின்றி அமரும் சக்தியைப் பெற்றிருக்கும் (6மாதம்).
2. குழந்தை ஆதாரத்தைப் பிடித்து எழுந்து நிற்கும் சக்தியைப் பெற்றிருக்கும் (7மாதம்).
3. குழந்தை தானாக எழுந்து ஆதாரத்தைப் பற்றாமல் நிற்பதற்கு முயற்சி செய்யும்.
4. குழந்தை சிறிய பொருள்களைத் தேடி எடுத்து கைகளிற்குள் பொத்திப் பிடிக்கும் திறனைப் பெற்றிருக்கும். அத்தோடு பொருள்களை ஒரு கையில் இருந்து மறுகையிற்கு மாற்றும் இயல்பும் குழந்தைக்கு இருக்கும்.
5. குழந்தை திண்ம உணவுகளை தானாக உட்கொள்ளும்.
6. குழந்தை ஒலிக்கு திரும்புதல், சில சொற்களை உச்சரித்தல் போன்ற செயற்பாடுகளை 10 மாதமளவில் காட்டும்.

## அவர்களின் அசைவுகளில் ஆரோக்கியம் தெரியும்

### ஒரு வயதுக் குழந்தை

1. குழந்தை வேறு பொருள்களின் உதவியுடன் நடக்க ஆரம்பிக்கும் (9மாதம்).



2. குழந்தை வேறு பொருள்களின் உதவியின்றி நடக்க ஆரம்பிக்கும் (12மாதம்).
3. குழந்தை பெருவிரலினதும் சுட்டு விரலினதும் உதவியுடன் மிகச் சிறிய பொருள்களை எடுக்கும் சக்தியைக் கொண்டிருக்கும்.
4. குழந்தை பெற்றோரின் சிறிய ஏவல்களை ஏற்று நடக்கவும் சொற்களை உச்சரிக்கவும் கற்றுக்கொண்டிருக்கும் (13மாதம்).
5. குழந்தை தன்னிச்சையாக நீர் பருகக் கற்றுக் கொள்ளும் (12மாதம்).

### 18-24 மாதக் குழந்தை

*(நடந்து திரியும் குழந்தை)*

1. குழந்தை சாதாரணமாக் நடக்கும் (20 மாதம்).
2. குழந்தை பந்தைக் காலால் உதைத்து விளையாடும் (20 மாதம்).
3. குழந்தை பென்சிலைப் பிடித்து கீறுவதற்கு பழகிக் கொள்ளும் (14மாதம்).
4. குழந்தை விளையாட்டுப் பொருள்களைப் பயன்படுத்தி விளையாட்டுக்களில் ஈடுபடும்.
5. குழந்தை இரண்டு சொற்களைச் சேர்த்து உபயோகிக்கக் கற்றுக் கொள்ளும் (24 மாதம்).
6. குழந்தை உடல் அங்கங்களை அடையாளம் காணும்.
7. குழந்தை தனது ஆடைகளை பிறரது உதவியின்றி தானாகக் கழற்றும் (18 மாதம்).
8. குழந்தை கரண்டியின் உதவியுடன் உணவருந்தப் பழகிக்கொள்ளும்.
9. குழந்தை தனது விருப்பத்தை வலியுறுத்தும் சக்தியைக் கொண்டிருக்கும்.
10. குழந்தையின் கட்புலன், செவிப்புலன் பெற்றோருக்கு திருப்தியளிக்கும் வகையில் அமையும்.

### 3-4 வயது

*(தொடர்புகொள்ளும் குழந்தை)*

1. குழந்தை ஒற்றைக் காலில் கெந்தி விளையாடும்.
2. குழந்தை படங்களை வரைய முயற்சி செய்யும் (4 வயது).
3. குழந்தை 3 வயதில் வட்டங்கள் வரையக் கற்றுக்கொள்ளும்.
4. குழந்தை 4 வயதில் புள்ளடிகளை இடும்.
5. குழந்தை 4 வயதில் தனது பெயரைக் கூறும் சக்தியைப் பெற்றிருக்கும்.
6. குழந்தை நிறங்களைப் பிரித்தறியும் (3 வயது).
7. 4 வயதுக் குழந்தை நன்றாகக் கதைக்கக் கற்றுக்கொள்ளும்.
8. தனது சுயவேலைகளை (பல் தீட்டுதல், கை கழுவுதல்) தானே மற்றவர்களின் உதவியின்றிச் செய்யும்.
9. குழந்தை மற்றக் குழந்தைகளுடன் விளையாடி வெற்றியடையும்.



10. குழந்தை சிறிய கதைகளைக் கேட்டு அதை திருப்பிக் கூறும் திறமையைக் கொண்ருக்கும்.

### மொழி அறிவும் பேச்சுத் திறனும்

சில குழந்தைகள் பேசுவதை மற்றவர்கள் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கும். இதற்கு வேறு அடிப்படைக் காரணங்கள் இருக்கலாம். மொழி தொடர்பாடலில் உள்ள குறைபாடுகளை முதலில் பெற்றோரே அவதானிப்பர். குழந்தை பேச ஆரம்பிப்பதற்கு தாமதமாவதற்கு 3 முக்கிய காரணங்கள் இருக்கலாம். அவை:

1. செவிப்புலன் இல்லாமை
2. சூழ்நிலை பாதிப்பு
3. பொதுவான உடல் வளர்ச்சி

குழந்தையின் பெற்றோரோ நெருங்கிய உறவினரோ தாமதமாகப் பேச ஆரம்பித்திருந்தால் குழந்தையின் பேச்சுத் தாமதம் பற்றிப் பயப்படத் தேவையில்லை.

### செவிப்புலன்

குழந்தை பிறந்தவுடன் ஒலிகளிற்கு துலங்கலைக் காட்டும். ஆனால் ஒலிகளைப் பிரித்தறிய மாட்டாது. குழந்தை ஒலிவரும் திசையை அறிந்து திரும்பும் இயல்பு ஒருவயதளவிலேயே வளர்ச்சியடைகிறது.

### சுகநலம்

ஆரம்ப காலத்திலேயே செவிட்டுத் தன்மையைக் கண்டுபிடிப்பது நல்லது. இதனால் குழந்தையின் பேச்சுத்திறன் பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம்.

### கட்புலன்

குழந்தையின் பார்வைப் புலன் பிறந்தவுடன் சற்றுக் குறைவாகவே இருக்கும். ஆரம்ப காலத்தில் கருவிழி சுயாதீனமாக அசையும். ஆறு கிழமையில் இந்த அசைவு இல்லாது போய்விடும். குழந்தையின் பார்வைப் புலன் 3 மாதங்களில் நன்றாக விருத்தியடைந்துவிடும். கட்புலனில் ஏற்படும் குறைபாடுகளையும் ஆரம்ப காலத்தில கண்டறிவதால் அவற்றைப் பெருமளவில் நிவர்த்தி செய்யலாம். குழந்தைக்கு வாக்குக்கண் 2 மாதங்களிற்கு மேல் இருந்தால் கண் வைத்தியரிடம் காட்டவேண்டும். ★

---

## இதயத்திற்கு இதமான 'அஸ்பிரின்'!

- அஸ்பிரின் வில்லைகள் உடலுக்குத் தீமை விளைவிக்கின்றது என்று பலரும் அஞ்சும் வேளையில் அது இதயத்திற்கு இரண்டு வகைகளில் இதம் தருகின்றது என்று அமெரிக்க இதய நோய் சம்மேளனம் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.
- அந்த அறிக்கையின்படி இரத்தம் கட்டிபடும் தன்மையை அஸ்பிரின் வெகுவாகக் குறைத்து இரத்தச் சுற்றோட்டத்தை இலகுவாக்கிறது.
- அடுத்து இதயத்தில் ஏற்படக்கூடிய வீக்கத்தை மிகவும் குறைக்கும் வல்லமை அஸ்பிரினுக்கு உண்டு.
- இந்த அறிக்கையை பிரித்தானிய சர்வ கலாசாலையைச் சேர்ந்த டாக்டர் பற்றிக் வலன்ஸ் உறுதிசெய்வதுடன் இவ்வியல்பு நூறு ஆண்டு முன்பதாக கண்டுபிடிக்கப்பட்டதுடன் இனிமேல் அஸ்பிரினை இதய நோய் நிவாரணியாக தயங்காது சிபாரிசு செய்யலாம் என்றும் உறுதியாகக் கூறுகின்றார்.

(க)

---

## விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு இங்கிருந்து 65பேர் செல்கின்றனர்

### றோயல் கல்லூரியில் அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே19

எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கென யாழ்.மாவட்டத்தில் இருந்து 65 மதிப்பீட்டாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டங்கள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் விடைத்தாள் மதிப்பீட்டிற்கு அழைக்கப்பட்ட சகல மதிப்பீட்டாளர்களையும் கலந்துகொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

யாழ்ப்பாணத்தில் விடைத்தாள் மதிப்பிடும் பணி நேற்றுமுன்தினம் யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகியது. இருநூறுக்கும் அதிகமான ஆசிரியர்கள் இம்மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இம்மதிப்பீட்டுப் பணிக்கான வெளிமாவட்டங்களின் விடைத்தாள்கள் கடந்த வியாழக்கிழமை செஞ்சிலுவைச் சங்கத்தேசக் குழுவினரால் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-8)

---

## தன்னலம் கருதாது பிறர்நலன் கருதிய சுகாதாரசேவையாளர் அமரர் மு.கந்தசாமி

முருகேசு கந்தசாமி இன்று எம்மோடு இல்லை. அவர் அமரர் மு.கந்தசாமி ஆகிவிட்டார். அளவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் தனது 21ஆவது வயதில் பொது சுகாதாரப் பரிசோதகர் பதவியை ஏற்று, முதல் நியமனத்தை தனிச் சிங்களக் கிராமம் ஒன்றில் பொறுப்பேற்றுக் கொண்டார். தனது திறமையால் சேவையில் பதவிநிலை ஏற்றம் கண்டு மலேரியாத் தடை இயக்கப் பொறுப்பதிகாரியானார். தனது சேவையை யாழ்.மாவட்டத்திலும் பின்பு கிளிநொச்சி மாவட்டத்திலும் தொடர்ந்த இவர் கிளிநொச்சி மண்ணில் மலேரியாத் தடை இயக்கப் பொறுப்பதிகாரியாகவும் பதில் சுகாதார வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றி அம்மண்ணின் - மக்களின்- பாராட்டைப் பெற்றுக் கொண்டார்.

தமிழின்மேல் பற்று - மண்ணின் மேல் அடங்காப் பேரன்புகொண்டு தனது இறுதிக்காலத்தில், ஓய்வு பெற்ற பின்பும் கிளிநொச்சி மண்ணிற்கு இவர் சேவை புரிந்தார். பதவியில் இருந்த போதும் ஓய்வுபெற்ற பின்பும் தனது பழைய துவிச்சக்கர வண்டியிலே யாருடைய தயவுமின்றி ஓடித் திரிந்தார். இவரின் திறமை கண்டு வைத்திய அதிகாரிகளே இவரிடம் ஆலோசனை பெற்ற சம்பவங்கள் பல உண்டு. இன்று பல வைத்திய அதிகாரிகள் காரிலே அமைச்சர்கள்போல பவனி வருவதைப் பார்க்கும்போது இவர் கிளிநொச்சி மண்ணிலே பழைய சைக்கிளில் கிராமம் கிராமமாகச் சென்று வந்ததையும், அவர் காலடிபடாத இடமே இல்லாததையும் எண்ணும் போதும் இவரின் சேவையை எவ்வாறு கூறுவது?

கிளிநொச்சியில் யோகர் சுவாமிகள் திருவடி நிலையத்தை நிறுவிய இவர், மக்கள் மத்தியில் ஆன்மீக சிந்தனை நெறிகளை விழிப்புணர்வு பெறச் செய்தார். யுத்தத்தினாலும் இடப்பெயர்வினாலும் அல்லலுற்ற மக்களின் நிலையற்ற வாழ்க்கைப் பயணததில முதியோர்களை சுமையாகக் கருதுகின்ற நிலைப்பாடு உருவானது. கைவிடப்பட்ட அநாதரவான முதியோர்கள் தங்குமிடமின்றி, மரநிழல்கள், ஆலயங்கள், வைத்தியசாலை என தஞ்சம் புகுந்து அல்லலுற்றதைக் கண்ணுற்ற

### நீத்தார் நயப்புரை

கந்தசாமி, அவற்றை கிளிநொச்சி மாவட்டத்தின் அன்றைய அரசாங்க அதிபர் எஸ்.தில்லை நடராஜாவின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுடன் ஒரு முதியோர் இல்லத்தை யோகர் சுவாமிகள் திருவடி நிலையத்தின் கீழ் நடத்துவதற்கென 11.05.1997ஆம் திகதிய கூட்டத்தில் தீர்மானித்து, 07.07.1997 ஆம் நாளில் கீற்றுக் கொட்டகையில் ஆரம்பிக்கக் காரணமாக இருந்தது. ஆரம்பத்தில் இந்த இல்லம் 65 வயதிற்கு மேற்பட்ட ஐந்து முதியவர்களை உள்வாங்கிச் செயற்பட ஆரம்பித்தது.

இம்முதியோர் இல்ல அமைப்பு வேலைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம துரித கதியில் முன்னெடுத்துச் சென்றது. அரச செயலகமும் அரசசார்பற்ற நிறுவனங்களும் நலன் விரும்பிகளும் இதற்குக் கைகொடுத்தன.

1997ஆம் ஆண்டு ஐந்து பேருடன

க.இளங்கோ
பொது சுகாதார பரிசோதகர்
துன்னாலை

ஆரம்பமான முதியோர் இல்லம் 2000 ஆம் ஆண்டு எண்பத்தேழு முதியவர்களை ஆதரிக்கும் நிலையை எய்தியது. இம்முதியோர் இல்லம் 2000ஆம் ஆண்டில் தென்மராட்சி இடப்பெயர்வினால் பாதிக்கப்பட்ட கைதடி முதியோர் இல்லத்திலும் தென்மராட்சியிலும இருந்த இருபத்தியிரண்டு முதியவர்களை பயனாளிகளாக உள்வாங்கி ஆதரித்து வருகின்றது.

தனது இறுதிக்காலத்தில் அமரர் கந்தசாமி முதியோர் இல்லத் தலைவராகச் செயற்பட்டுவந்தார். முதியோர்களுடன் முதியோர் இல்லத்தில் தங்கியிருந்தவேளை எல்லோரும் கதறியழ, கிளி நொச்சி மண் சோகத்தில் வாடத் தமிழ் மண்ணில் வித்தாகிச் சென்றுவிட்டார். காலம் மாறினும் ஐயாவின் சேவையை என்றும் - ஒரு போதும்- கிளிநொச்சி மண் மறவாது. ஐயாவின் பெயர் என்றும் நிலைக்கும்; வாழும். ☆

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

1 1/2 மாத வயதுடைய, பூச்சி நீக்கிய நல்லின அல்சேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.குகறாஜன், சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (3813)

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், மீன் தொட்டிக்குரிய அழகு சாதனப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (3838)

தற்போது பால் கறந்து கொண்டிருக்கும் இரண்டு பசு மாடுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. புஸ்பவதி, 678/2, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, கமலா வைத்தியசாலைக்கு முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (3862)

மரம் அரியும் பட்டடைக்குத் தேவையான சகலவிதமான உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.கிளைமன் செல்வதாஸ், புனித அந்தோனியார் வீதி, மில் எதிர் ஒழுங்கை, பருத்தித்துறை. (3751)

நல்லின German Shepherd (அல்சேஷன்) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கி.சேந்தன், 15/23, மாரியம்மன் வீதி, முருகேசர் வளவு, திருநெல்வேலி (சிவன், அம்மன் கோயில் அருகில்). (3875)

U.K.இல் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட 58 K.V.A. PERKING TEMSET (U.K. தயாரிப்பு) மின்பிறப்பாக்கி உடன் விற்பனைக்கு உண்டு. மின் தடை ஏற்படும்போது (856 மணித்தியாலங்கள் மட்டுமே பாவிக்கப்பட்டது). தொடர்பு: S.A. பாலச்சந்திரன். தொலைபேசி: 3442 (3874)

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் ஓவ்செற் மெசின் (Off set machine) லீகல் சைஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு: ১৮3, பருத்தித்துறை வீதி, யாழ்.மாநகர சபைக்கு அருகில் நல்லூர். (3890)

உபயோகித்த ஏயர் கொம்பிறெசர் றீபோறிங் மெஷின், வாகன சேவிஸ் மெசின், ஒக்ஸ்போட் கார் கிறாங், B.M.C 4 சிலிண்டர் கிறாங், CD125 BENLY மோட்டார் சைக்கிள், 4 ஸ்ரீ மொறிஸ் மைனர் கார் ஆகியவை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 136, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (3902)

2 மாதம் பயன்படுத்திய கொம்பியூட்டர், லேசர் பிறின்ரர், யு.பி.எஸ், றோனியோ மெசின் போன்றன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 282, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (3897)

## வீடு விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெருவில் கைலாச பிள்ளையார் கோயிலுக்கும் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கும் இடையில் 2 பரப்புக காணியில் 4 அறைகளுடன் கூடிய கல்வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விள.இல. 1520, மே/பா. உதயன். (3866)

## தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள், நல்லூர், திருநெல்வேலி K.K.S. Road சுற்றாடலில் குறைந்தது 2 அறைகளுடன் மின்சாரம் சகல வசதிகளுடன் கூடிய ஒரு தனி வீடு ஒரு ஆசிரியைக்கு உடன் வாடகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1521, மே/பா உதயன். (3889)

## தவறிவிட்டது

மரியாம்பிள்ளை மேரி டொலறோஸ் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை(616062905V), விசேட அடையாள அட்டை, தொண்டர் ஆசிரியருக்கான அடையாள அட்டை என்பன யாழ்.போதனா வைத்தியசாலை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் புனித யுவானியார் ஆலயம், ஆஸ்பத்திரி வீதி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். (3892)

கைதடியைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை மலைமாணிக்கம் என்பவருடைய தே.அ.அ.இல. (490262636V), விஷேட அ.அ.(இல.091055105) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கைதடியில் உள்ள வீனஸ் சலூனில் அல்லது க.மாணிக்கம், பண்ணாகம் தெற்கு, சுழிபுரத்தில் ஒப்படைக்கவும். (3896)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (3723)

## கல்வி

O/Lஇல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 37 வயது அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் "A" பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (3857)

## திருமண சேவை

மணமகனா? மணமகளா? உள்நாடா? வெளிநாடா? எத்தகைய மணமக்களானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். திரு.எம்.பொன்னுத்துரை, ஹரே கிருஷ்ணா திருமண சேவை, பெரிய மதவடி, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (3056)

## தகுதிகாண் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,மே19

பொது எழுதுநர் சேவையின் அதி சிறப்பு வகுப்புக்கு பதவி உயர்த்துவதற்கான தகுதிகாண் பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, தரம்-3இல் உள்ள கிராம சேவகர்களை தரம் - 2 இற்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சையும், நூலகர் சேவையில் உள்ளவர்களுக்கான வினைத் திறமைகாண் பரீட்சையும் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

## மறைந்த கவிஞரின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே19

மறைந்த கவிஞர் யாழ். ஜெயத்தின் (ம.விக்ரர்) முதல்வருட நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.திருமறைக்கலா மன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அன்னார் தொகுத்து உருவாக்கிய 'தேடிக்குவித்த திரவியங்கள்' என்றும் சிந்தனைத் தொகுப்புநூல் வெளியிடப்படவுள்ளதுடன் அஞ்சலி உரைகளும் இடம் பெறவுள்ளன. (ஒ-8)

## தபாற்பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,மே19

கடந்த வியாழக்கிழமை காங்கேசன்துறைக்கு வந்த 'செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 245 தபாற் பொதிகள் எடுத்துவரப்பட்டன.

இதேகப்பலில் குடாநாட்டில் இருந்து 31 தபாற்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக யாழ். தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-10)

### விற்பனைக்கு

மிற்சுபிஷி பஜீரோ ஜீப்

தயாரிக்கப்பட்ட ஆண்டு: 1986
பதிவு செய்யப்பட்ட ஆண்டு: 13.05.1986
வாகன இலக்கம்: 32 ஸ்ரீ2822
சிலிண்டர் அளவு: 2500 சீசீ
- இன்ரகூலர் ரேபோ.
நிறம்: வெள்ளை

தொடர்புகளுக்கு :
DON WINDSOR & CO (PVT.)LTD.,
NO:6/1, CLOSENBERG ROAD, MAGALLE, GALLE.
முதித்த டி.வின்ட்சர்
கையடக்கத் தொலைபேசி
இல. 072– 230135 அல்லது/ 077–901045 முதித்த
(3812)

### Massey Ferguson Tractors

உழவு இயந்திரம் விற்பனைக்கு உண்டு
புதுப்பிக்கப்பட்ட
எடந்டர் மாடல் - 135 - 240
அத்துடன்
டீசல் இன்ஜெக்ரர்
நொசிள்ஸ் + பம்பிகளும்
எங்களிடம் உள்ளன.
தேவையெனில்
இந்த முகவரிக்கு
தொடர்புகொள்ளவும்.

ஜெயகிருஷ்ணா ரேடேர்ஸ்

240, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
☎ இலக்கம்: 2837
(3797)

### விற்பனைக்கு

லிஸ்ரர் பிளாக்ஸ்ரோன் கியர்பொக்ஸ் உடன் கூடிய மரைன் எஞ்சின்
முற்றிலும் தரமான

HP 33
RPM 1800
MODEL 1822 HA 3 M 13
CONTACT:
DON WINDSOR & CO (PVT.) LTD.,
No: 6/1, CLOSENBERG ROAD, MAGALLE, GALLE.
MUDITHA D. WINDSOR
FAX No:
074-380737
MOBILE No:
072-230135 OR 077-901045
MUDITHA.
(3798)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா இன பேடு, புறொயிலர் ஒருநாள் குஞ்சுகள் என்பனவற்றைக் குறைந்த விலையில் எம்மிடம் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

| மாருதி ரெக்ஸ் | சிற்றி காமென்ஸ் |
| --- | --- |
| இல.1, பஜார் வீதி, யாழ்ப்பாணம். | 535A, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P.:3453 |

(3900)

### கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும், கல்லூரியின் முகாமைத்துவ உதவியாளருமான
செல்வி சசிலினி சரவணமுத்து
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் தம்பையா சரவணமுத்து**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய கழகம்,
மானிப்பாய் இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.

(3899)

### மரண அறிவித்தல்

**தம்பையா சரவணமுத்து (சண்முகம்)**

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் பட்டினசபை ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சரவணமுத்து அவர்கள் (16.05.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - தங்கம்மா தம்பதிகளின் அருமைப் புத்திரனும், உடுப்பிட்டி காலஞ்சென்ற சீவரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், சசிலினி (யா/மானிப்பாய், இந்துக் கல்லூரி முகாமைத்துவ உதவியாளர்), சசீலன் (ஹொலண்ட்), சசீதரன் (ஹொலண்ட்), சசீந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்களாம்பிகை (ஹொலண்ட்), கஜேந்தினி (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய்.* (3898)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### ஓராண்டு நெஞ்சகலா நினைவலைகள்.....



*அம்மா நாம் தாங்குவோமோ?*

கல்வியால் சிறந்து நின்றாய்!
கலைகளால் வளர்ந்து நின்றாய்!
நல்லவாம் கருத்தையெல்லாம்
நாளுமே வாழ்விற் கொண்டாய்!
சொல்லரும் குணங்கள் கொண்டாய்!
துஷ்யந்தி எனும் பேர் கொண்டாய்!
அல்லல் நாம் எய்தச் சென்றாய்!
அம்மா நாம் தாங்குவோமோ?

பெற்றவர் அன்பைப் பெற்றாய்!
பெரியவர் ஆசி பெற்றாய்!
பற்றினால் உடன் கற்றோர்கள்
போற்றிடும் பேறுபெற்றாய்!
நற்றவம் ஆகி நீயோ
நாளுமே வளர்ந்தாய் ஏனோ
சற்றுமே கூறிடாமற் சென்றாய்
அம்மா நாம் தாங்குவோமோ?

**செல்வி இலங்கைநாயகம் துஷ்யந்தி (துர்க்கா)**

*(உயிரியல் பிரிவு மாணவி, தி / ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி)*

| மண் மகிழ | விண் மகிழ |
| --- | --- |
| 11 ✦ 09 ✦ 1984 | 29 ✦ 05 ✦ 2001 |

திதி: சப்தமி

அமரத்துவம் அடைந்த எமது அன்புச் செல்வத்தின் ஓராண்டு நினைவு தினமாகிய இன்று (19.05.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல தெல்லியூர் ஸ்ரீ துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

இ.கேசவன் *(பிரான்ஸ்)*

த.முகவரி:
*26, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை. T.P. 026 22397*

நி.முகவரி:
*வசாவிளான் வடக்கு, வசாவிளான்.*

*பிரிவால் துன்புறும்:*
அப்பா, அம்மா, அம்மம்மா, அண்ணாமார், அண்ணிமார்.

(3895)

# வலிகாமம் இடப்பெயர்வை கண்முன் காட்டும் கதை



நூல் :- 'முடிவில்லா ஆரம்பங்கள்'

ஆசிரியர் :- சு.சிவராசா

## நூல்விமர்சனம்

'முடிவில்லாத ஆரம்பங்கள்' என்னும் இந்நெடுங்கதை யாழ்ப்பாணத்தில் இன்று வாழும் ஒவ்வொருவருடைய அனுபவங்களையும் உள்ளடக்கியதொன்று.

"வலிகாமம் இடம்பெயர்ந்து தென்மராட்சிக்குள் வந்தபோது நடந்தவை. இங்குள்ள மக்கள் ஒவ்வொருவர் மனத்திலும் நீங்காத நினைவுகள்; மறக்கமுடியாத அனுபவங்கள். அந்த அனுபவக் கடலில் மூழ்கி, முக்குளித்து வெளியே வந்த ஒருவன் குடித்த உப்புத் தண்ணீரை எல்லாம் வாந்தி எடுத்தான். அவன் வெளியே கக்கிய அந்தச் சிறிதளவு நீர்தான் இந்த முடிவில்லாத ஆரம்பம்" என்று கதை எழுதிய ஆசிரியர் அக்கதையின் கரு என்ன என்பதை உருவகமாகக் கூறியுள்ளார்.

இராமநாதன் - யசோதா - ரமா குடும்பம் 1995இல் வலிகாம இடப்பெயர்வின்போது இடம்பெயர்ந்து தென்மராட்சி, கிளிநொச்சிப் பகுதிகளிலே பல இன்னல்களுக்குள் வாழ்ந்து இறுதியில் கடற்படையின் சூட்டினால் கிளாலிக் கூடாகச் சென்ற வள்ளங்கள் இரண்டு தண்ணீரில் மூழ்க, ரமா தந்தையையும் தாயையும் இழந்த அநாதையாகிறாள். இக்கதையினூடாக வலிகாமம் இடப்பெயர்வின்போது இடம்பெற்ற பல நிகழ்வுகளை ஆசிரியர் எளிமையான, யதார்த்தமான முறையிலே விவரிக்கிறார். திரு.சு. சிவராசா உண்மைச் சம்பவங்களை வைத்துக் கதையாகப் பின்னி இலக்கிய வடிவமாகத் தரும் ஆற்றலுடையவர் என்பதற்கு இந்நெடுங் கதை சான்றுகாட்டுகின்றது. 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கையின்போது எல்லாவற்றையும் இழந்த மகாலிங்கத்தார், முன்பின் அறியாவிட்டாலும் இராமநாதனுக்கு உதவ முன்வந்த கந்தசாமி என்னும் பாத்திரங்கள் கதையைப் படித்து முடித்த பின்னரும் மனதில் நிற்கின்றன.

சாந்தி என்னும் பாத்திரத்தைக் கதாசிரியர் மிக நேர்த்தியாகப் படைத்திருக்கிறார். இராமநாதனை அவள் முதன்முதலாகக் கண்ட பொழுது அவள் மனதிலேற்பட்ட இனம்புரியாத மகிழ்ச்சி; அவன் திருமணமானவன் என்று அறிந்தபோது ஏற்பட்ட அதிர்ச்சி, எனினும் தன்னை அவள் இசைவுபடுத்திக்கொண்ட நிலை கதாசிரியராலே நன்றாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

திரு.சிவராசாவின் 'முடிவில்லாத ஆரம்பங்கள்' என்னும் இக்கதையில் பெயர்சூட்டாமல் வரும் பல்லாயிரம் பாத்திரங்களுள் நானும் ஒருவன் என்ற வகையில் இக்கதை என் மனத்தைத் தைக்கின்றது. ஆசிரியருக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

*- பேராசிரியர் அ.சண்முகதாஸ்*

# சுன்னாகம் பகுதியில் மக்கள் பயன்படுத்தும் பாதையை மூடவேண்டாம் எனக் கோரிக்கை

சுன்னாகம்,மே19

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தின் கிழக்குப் பக்கமாக மக்கள் பயன்படுத்திவரும் பாதையை மூட வேண்டாம் என்று சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

மின்சார சபையால் சுவீகரிக்கப்பட்ட பகுதியில் உள்ள மேற்படி பாதை கடந்த 35 ஆண்டுகளாக அப்பகுதி மக்களால் போக்குவரத்துக்குப் பயன படுத்தப்பட்டு வந்ததாகவும் -

அப்பகுதிக் குடியிருப்புக்களுக்கும், விவசாய நிலங்களுக்கும் மக்கள் இப்பாதை ஊடாகவே சென்று வந்ததாகவும் -

சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னரே பாதையை மூடாது மக்களைப் பயணம் செய்ய அனுமதித்து விட்டு, திடீரென மூடுவதால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே பாதையைப் பயன்படுத்தி மக்கள் தமது நிலங்களுக்கும், குடியிருப்புகளுக்கும் செல்வதற்கு மாற்று ஏற்பாடு செய்யப்படும்வரை மேற்படி பாதை மூடப்படக்கூடாது.

- இவ்வாறு சம்மேளனம் கேட்டுள்ளது. (ஒ-27)

# தடைநீக்க விவகாரம் குறித்து கொழும்பில் சுவரொட்டிப் 'போர்'

கொழும்பு,மே19

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்க விவகாரம் தொடர்பாக கொழும்பில் ஆதரித்தும் எதிர்த்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

எந்தச் சக்தி எதிர்த்தாலும் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக புலிகள் மீதான தடையை அரசு நீக்கிவிடவேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் சமாதான முன்னணி மற்றும் வேறு பல பொது அமைப்புகளின் பெயர்களில் கொழும்பின் முக்கிய இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

இதேசமயம், புலிகள் மீதான தடை ஒருபோதும் நீக்கப்படக்கூடாது என்று வலியுறுத்தும் சுவரொட்டிகள் ஜே.வி.பி. மற்றும் சிஹலஉறுமய ஆகியவற்றின் பெயர்களில் ஒட்டப்பட்டுள்ளன.

மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகளில் ஒரு தரப்பினரின் சுவரொட்டிகள் மீது மற்றைய தரப்பினர் தமது சுவரொட்டிகளை ஒட்டி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சுவரொட்டிப் போட்டி சமீப காலத்தில் அதிகரித்துள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

# ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதே கிறிஸ்தவர்களின் முக்கிய சமயப்பணி

## ஞாயிறு நற்பிரசாதம்

'பிறக்கும் போதும் அழுது கொண்டே பிறந்தேன். வறுமை வாழ்வு வந்தபோதும் அழுதேன். தொடர்ந்தும் அழுதுகொண்டே உயிர் வாழுகின்றேன். இன்னும் எத்தனை அழுகையோ அத்தனையும் இப்போதே பார்த்துவிட்டேன். அழுவதற்கு கண்ணில் கண்ணீரும் இல்லை என்று தெரிந்த பின்னரும் அழுகின்றேன். மண்ணில் பிறந்த பாவத்திற்காய் அதுவும் ஏழையாய் பிறந்த பாவத்திற்காய் மனதுக்குள்ளேயே அழுது தீர்க்கின்றேன்' இவ்வாறாக ஒரு ஏழை பெருமூச்சு விடுகின்றான்.

நாம் நாளாந்தம் எம் வாழ்வில் சந்திக்கும் 'ஏழை', 'ஏழ்மை' என்ற சொற்களுக்கும், இயேசு மத்தேயு நற்செய்தியில் மலைப் பொழிவில் கூறுகின்ற, 'ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது, துயருறுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்' (மத.5:3-4.10) என்ற இறை வார்த்தைக்கும் இடையே உள்ள தொடர்பினை எம்மால் சிந்தனை செய்ய முடிகின்றதா? லூக்கா நற்செய்தியாளர் 'ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றவர்கள்' என்றும், மத்தேயு நற்செயதியாளர் 'ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்' என்றும் கூறுகின்றார். ஆனால் இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டவை அல்ல. மாறாக ஒன்றையொன்று மெருகூட்டுவதாக, பொருள் மிகுந்ததாக மாற்றுவதை நாம் காணுகின்றோம்.

யார் இந்த ஏழைகள்? இவர்கள் நாம் சாதாரணமாகச் சந்திக்கின்ற ஏழைகள்தான். வாழ்வின் அடிப்படைத் தேவைகளைக்கூட அனுபவிக்க முடியாதவர்கள். உணவு, உடை, உறையுள், கல்வி போன்றவற்றை தமது வாழ்வில் கண்டுகொள்ள முடியாதவர்கள். இவர்களையே நாம் ஏழைகள் என்று அழைக்கின்றோம். பல அதிகார வர்க்கத்தினால் அடிமைப்படுத்தப்படுகின்றவர்கள். தமது வாழ்வில் பலவற்றை அடையவேண்டும் என்று போராடுகிறவர்கள். இவர்களுக்கு எமக்கு பாரிய கடமையும் பணியும் உள்ளது.

கடவுளின் அன்பும், அருளும் எப்போதும் இருந்துகொண்டே வருவதை வேதாகமத்தில் பல ஆதாரங்கள் ஊடாகக் காணுகின்றோம். ஏனென்றால் சமூகத்தின் சமத்துவமின்மையால் தோன்றும் இந்த 'ஏழ்மை' கடவுளின் தன்மைக்கு எதிரானது. ஆனால் கடவுள் இதனை, மனிதர் தமது வாழ்வில் தூய்மையடைய ஒரு சிறந்த வழியாகப் பாவிக்கின்றார்.

எமது ஆன்ம உடல் சக்திகள் எல்லாவற்றையும் பயன்படுத்தி, சமத்துவமின்மையால் வருகின்ற இந்த ஏழ்மையை எமது சமூகத்திலிருந்து துரத்திவிட நாம் பாடுபடவேண்டும். ஏனென்றால் லூக் 4:18 இல் இயேசு, ஏழைகளுக்கு, சிறைப்பட்டோருக்கு, பார்வையற்றோருக்கு, ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தி போதிக்கவே நாம் வந்ததாகக் கூறுகின்றார், மொத்தத்தில் இவர்கள் எல்லோரும் ஏழைகள். இவ்வாறான ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதுதான் கிறிஸ்தவர்களாகிய எமது பணி. அதாவது விண்ணரசுக்கு மக்களை அழைத்துச் செல்வதுதான் எமது பணி. இறைவார்த்தை கூறுவது போன்று இந்த ஏழைகள்தான் விண்ணரசுக்கு உரியவர்கள். எனவே இந்த ஏழைகளைப் பொறுத்தவரையில் எமக்கு பாரிய கடமையும் பணியும் உள்ளது.

இயேசுவின் வாழ்வு முழுவதும் இந்த ஏழ்மை வாழ்வதாகவே அமைகின்றது. பல சௌகரியங்களை தனதாக்கிக் கொள்ளக்கூடிய வல்லமை அவருக்கு இருந்தாலும், மூவுலகிற்கு அரசராகிய இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார்; ஏழையாக வாழ்ந்தார்; இறக்கும் பொழுதுகூட, தனது மானத்தை மறைக்க இடுப்பில் ஒரு சிறு துண்டைத்தவிர, இரண்டு கைகளையும் விரித்து எதையும் எடுத்துச் செல்லாதவராகவே அவர் இறந்தார். அவரை அடக்கம் செய்ததும் பிறிதொருவரின் கல்லறையில்தான். இவ்வாறு இயேசு ஏழ்மையாக வாழ்ந்து எமக்கு முன்மாதிரியாக நடந்து காட்டினார்.

ஆதித் திருச்சபை வரலாற்றில், ஏழைகளை அன்பு செய்யவேண்டும், அவர்களுடன் தமக்குரியவற்றிலிருந்து பகிர்ந்து கொள்ளவேண்டும், அவர்களும் நம்மில் ஒருவர் என்ற உணர்வு கிறிஸ்தவர்களுக்கு இருந்தது.

அருட்சகோதரர் எஸ்.பிரான்சிஸ்

கிறிஸ்தவர்களாகிய ஒவ்வருவரின் மேலும் சுமத்தப்பட்ட பெரும் பணியாக இருக்கின்றது. ஏதாவது நொண்டிச் சாட்டுக்கள் சொல்லி இறையரசை ஏழைகள் மத்தியில் பரப்பும் பணியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. முதலில் ஏழைகள் மட்டில் எமக்குள்ள மனநிலையை மாற்றிக் கொள்ள வேண்டும். எல்லோரும் கடவுளால் படைக்கப்பட்டவர்கள், எனவே அவர்களும் எங்கள் சகோதரர்கள் என்ற உணர்வினை உருவாக்கிக் கொள்ளுவோம். எமக்குள்ளவற்றிலிருந்து ஏழைகளோடு பகிர்ந்து கொள்ளுவோம். இவற்றுக்கு மேலாக இயேசுவின் நற்செய்தியை இவர்கள் மத்தியில் மலரச் செய்வோம். இவ்வாறு இவர்களை இறையரசுக்கு தகுதியானவர்களாக மாற்றுவோம்.



சிறுப்பிட்டி மேற்கு, பெருதலைசிவன் ஆலயத்துக்கான அடிக் கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அடிக்கல்லை நட்டு வைத்து கும்ப தீர்த்தம் தெளிப்பதைப் படத்தில் காணலாம். ஆலய பரிபாலனசபை உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (எ)

# அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே19

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணி ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது.

அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு பாதுகாவலர் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ஒ-10)

# மக்கள் முகம்



நல்லூர் சிவன் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணிய ஐயர் கெங்காதர சர்மா நல்லூர் பிரதேச கலாசார சபையினால் 27.02.2002 அன்று நடத்தப்பட்ட கலாசார விழாவில் 'கலைஞானச் சுடர்' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பரமேஸ்வராக் கல்லூரியில் கல்விகற்ற இவர் பிரபல ஓவிய ஆசிரியர்களான எஸ்.பொன்னையா, ஆர்.கனகசபை ஆகியோரிடம் ஓவியக் கலையை பயினறு கொண்டார்.

கண்ணாடி ஓவியம் வரைவதில் வல்லவரான இவர், 1973இல் யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது லக்ஷமி, சரஸ்வதி ஓவியங்களை வரைந்து கொடுத்ததுடன் சிவனின் 25 மூர்த்தங்களையும் ஓவியங்களாக வரைந்து கொடுத்துள்ளார்.

நல்லூர் சிவன்கோயிலுக்கு சந்திரசேகரர் சிலையை வார்ப்பில் வடித்துக் கொடுத்த இவர், இதுவரை 1000இற்கும் மேற்பட்ட யந்திரத் தகடுகளைக் கீறியதுடன், கொத்து வேலைகள் செய்வதிலும் வல்லவராகத் திகழ்ந்துவருகிறார். அத்துடன் களிமண் உருவங்கள் செய்வதிலும் இவர் திறமை மிக்கவர். (எ-13)

☆ ☆ ☆



சோதிடக்கலை வல்லுநரான சிவக்கொழுந்து இரட்ணராஜா தமிழகத்தின் புகழ்பூத்த சோதிட மேதை எஸ்.கிருஷ்ணமூர்த்தியின் வழிநடத்தலைப் பின்பற்றி சோதிடம் கூறிவருகின்றார். யோகர் சுவாமிகளின் ஆசியைப் பெற்ற இவர் ஓர் எழுத்தாளருமாவார்.

கைரேகை, சாஸ்திரம் மற்றும் சோதிடக்கலைத் திறன்மிக்க இவர், 23 வருடங்கள் உயர் நீதிமன்றத்தில் சுருக்கெழுத்தாளராகப் பணியாற்றினார். ஆங்கில வார இதழான 'சண்டே ஒப் சேவரில்' சோதிடம் தொடர்பான கட்டுரைகள் எழுதியுள்ளார். 'சற்றடே றிவியூவிலும்' இவர் பணியாற்றியுள்ளார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் மிக்க இவர் 'திசை' எனும் பத்திரிகையிலும் சோதிடக் கலை பற்றி எழுதியுள்ளார். (எ)

☆ ☆ ☆



கொழும்பு, உயர் நீதிமன்றத்திலும், கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் அலுவலராகக் கடமையாற்றியவரும், தற்பொழுது யாழ்.பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருபவருமான சரவணமுத்து பேரானந்தன் 2002.03.25 அன்று யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் யாழ்.நீதி நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியான இவர் மருதானை தொழில்நுட்ப கல்லூரியில் கணக்கியல் டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் ஒரு சமூக சேவையாளருமாவார். நாச்சிமார் கோயிலடி ஸ்ரீகாமாட்சி அம்மன் ஆலயத்தின் மகாசபை அங்கத்தவர், ஸ்ரீகாமாட்சி சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவர் என்ற பதவிகளையும் இவர் வகித்துள்ளார். இவர் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். (எ)

☆ ☆ ☆



தாவடியைச் சேர்ந்த ஓதுவார் இராசையா திருஞான சம்பந்தன் யாழ்.மாவட்டச் சமாதான நீதிவானாக அண்மையில் மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

கடந்த 37 ஆண்டுகளாகப் பண்ணிசைத் துறையில் பணிபுரிந்துவரும் இவர், தமிழகம், மலேசியா ஆகிய நாடுகளில் பல பண்ணிசைக் கச்சேரிகளை நடத்திப் பராட்டுகள் பல பெற்றவர்.

1976ஆம் ஆண்டில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தால் 'பண்ணிசை வேந்தர்' என்ற பட்டத்தையும், 1982ஆம் ஆண்டில், தமிழகம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தினால் 'தேவார இசைமணி' என்ற பட்டத்தையும், 1999ஆம் ஆண்டில், கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தினால் 'அருளிசையரசு' என்ற பட்டத்தையும் அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளினால் 'திருமுறைவித்தகர்' என்ற பட்டத்தையும், 2001ஆம் ஆண்டில், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலைஞானகேசரி' என்ற பட்டத்தையும் இவர் பெற்றுள்ளார். (எ)

## இந்துமத குருமார்களின் கவனத்துக்கு!
### இந்துமத குருமார்களின் விவரம் திரட்டல்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட இந்துமத குருமார்கள் தங்களின் பெயர், முகவரி, வயது, சேவையாற்றும் ஆலயம், காலப் பகுதி, அனுபவ அடிப்படை ஆகிய சுயவிவரங்களை தாமதமின்றி எதிர்வரும் 21.05.2002இற்கு முன் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியப் பொதுச் செயலாளரின் இல்லத்தில் சமர்ப்பிக்கவும்.

பொதுச்செயலாளர் முகவரி: - பொதுச் செயலாளர்
கா.சந்திரசேகரசர்மா
'சிங்கவாசா',
கிறிஸ்தவ கல்லூரி முன்பாக,
கோப்பாய். (3919)

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய குருகுலம்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் குருகுலம் வகுப்புகள் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் ஆரம்பமாகவுள்ளது. மேற்படி குருகுலத்தில் இணைய விரும்பும் மாணவர்கள் தங்கள் பகுதிக்கு அண்மையிலுள்ள எமது அமைப்பின் நிர்வாக சபை உறுப்பினரிடம் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூர்த்திசெய்து அவர்களிடமே எதிர் வரும் (25.05.2002) இற்கு முன்பதாகக் கையளிப்பதோடு குரு குல வகுப்புகள் ஆரம்பமாகும் தினத்தன்று பெற்றோர்/பாதுகாவலரையும் அழைத்துவரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

கா.சந்திரசேகரசர்மா
(3918) (பொதுச் செயலாளர்)

## உடன் பதிவு செய்யவும்

புகையிரதக் கடவை ஊழியர்கள் அனைவரும் கிருஸ்னர் கோயிலடி, இராச வீதிச் சந்தி, தேநீர்க் கடையில் 31.05.2002ஆம் திகதிக்கு முன்னதாக அவசரம் வந்து பதிவுசெய்யவும்.

தகவல்:
கோப்பாய் மத்தி. (3911) சி.இளங்கோ


ACCESS SOLAR

யாழ்.மக்களுக்கு சூரிய மின்கலம் மூலம் மின்னொளி பரப்பிட,
யாழ்.நகரில்

## ACCESS SOLAR CENTRE
## அக்ஸஸ் சோலர் சென்ரர்

* தரச் சிறப்பு வாய்ந்த ஆஸ்திரேலியத் தயாரிப்பு.
* பராமரிப்புச் செலவு, பொருத்துதல் செலவு இலவசம்.
* கொழும்பு விலையிலும் பார்க்க சிறிய வீத அதிகரிப்பு மாத்திரமே!
* 25% உடன் காசும், 75% வங்கிக் கடன் இலகு தவணைப் பணக் கொடுப்பனவுமூலமும் செலுத்தக்கூடிய அரிய வாய்ப்பு!
* 3,5,7,8,9,10,12,15 மின்குமிழ் மின்கல இணைப்புக்கள்.
* 25 வருட உத்தரவாதத்துடன்.

மேலதிக தகவல்களுக்கு,
காட்சிக்கூடம்
79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(3912) தொலைபேசி இல.: 2405, 2171.



## சந்தைப்படுத்தல் துறையில் சாதனை படைக்க விரும்புகின்றீரா?

PHARMCO, சர்வதேச அங்கீகாரம் பெற்ற FMCG (அத்தியாவசிய நுகர்வு) பொருள்களை இலங்கையெங்கும் சந்தைப்படுத்தும் ஒரு முன்னணி நிறுவனமாகும். எமது வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சி காரணமாகவும், நாம் அறிமுகப்படுத்திய பொருள்களுக்கு சந்தையில் நிலவுகின்ற கேள்வியும், எமது சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல் சம்பந்தமான திட்டங்களை வகுக்கக் காரணமாயிற்று. எமது நிறுவனத்தின் இலட்சியத் திட்டங்களை அடைய எமது நிறுவனத்தின் சந்தைப்படுத்தற் பிரிவிற்கு அனுபவமுள்ள, ஆற்றலுள்ள, துடிப்புள்ள இளம் விண்ணப்பதாரர்களின் சேவை எதிர்பார்க்கப்படுகின்றது.

**யாழ்.குடாநாட்டுக்கான விற்பனைப் பிரதிநிதிகள்**

சந்தைப்படுத்தல் துறையில் முன்னேற்றகரமான ஒரு வளர்ச்சியை அடைய ஆர்வமுள்ள இளம் விண்ணப்பதாரர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

- யாழ்.குடாநாட்டில் எமது நிறுவனத்தின் பொருள்களை சந்தைப்படுத்தவும், விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகள் மூலம் நிறுவனத்தின் விற்பனையை அதிகரிக்கவும் ஆற்றலுள்ளவராக இருத்தல் அவசியம்.
- அத்தியாவசிய நுகர்வுப் பொருள்கள் விற்பனையில் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. அனுபவமில்லாத ஆனால் சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ளவர்களும் கவனத்திற் கொள்ளப்படுவர்.
- க.பொ.த.சாதாரண தரத்துடன் திருப்திகரமான இரண்டாம் நிலைக்கல்வி.
- 30 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

*உங்கள் திறமைக்கும், அனுபவத்திற்குமேற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.*

உங்கள் முழு விவரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தில் இரண்டு உறவினரல்லாத முக்கியஸ்தர்களின் விவரங்கள், தொலைபேசி இலக்கங்கள் அடங்கலாக இருத்தல் அவசியம்.

நேர்முகப் பரீட்சை மே மாதம் 21ஆம் திகதி காலை 9.00 - 2.00 மணிவரை கீழ்க்காணும் முகவரியில் இடம்பெறும்.

**பார்ம்கோ மார்க்கடிங் சர்விசஸ் (தனி) நிறுவனத்தின் யாழ்.குடாநாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்**

## JEGAN PHARMACY
No.462/B, Hospital Road, Jaffna. Tel: 021-2194
சி-22188

MOOV Pain Reliever · KRACK For Cracked Heels · BoroSoft Soft & Smooth Skin Cream · BoroSoft Aloe-vera Soap · Freshia · Zinal · Business · D'cold · D'cold · SPORTSTAR Foam · SPORTSTAR


## வீட்டின் மீது பனை விழுந்து 4 பேர் காயம்!

யாழ்ப்பாணம்,மே19

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று காலை 11 மணியளவில் வீசிய கடுங்காற்றினால் முறிந்த பனை மரம் வீடொன்றின் மீது விழுந்தது. இதில் அந்த வீடு முற்றாகச் சேதமடைந்ததுடன், அதனுள் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

ஓட்டுமடம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இலட்சுமணன் இராசேந்திரம்(வயது 44), அவரது பிள்ளைகளான இராசேந்திரம் சதீஸ்குமார்(வயது 12), இராசேந்திரம் சசிகரன்(வயது 5) ஆகியோரும் அங்கிருந்த கைலைநாதன் சிம்சோன் (வயது 6) என்ற சிறுவனும் காயமடைந்தனர். (ஒ-15)

## பாடசாலைகள் மீண்டும் சொந்த இடங்களில்

தென்மராட்சி,மே19

சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள சக்தியம்மன் தமிழ் வித்தியாலயம், சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியன நாளைமுதல் மீண்டும் சொந்த இடங்களில் இயங்கவுள்ளன.

ஷெல் வீச்சுக்களால் இப்பாடசாலைகள் சேதமடைந்துள்ள போதிலும் இப்பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள மாணவர்களின் நலன் கருதி இப்பாடசாலைகளை மீண்டும் சொந்த இடங்களில் ஆரம்பிக்கவுள்ளதாக பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர். (ஒ-117)

## பச்சிலைப்பள்ளி மக்களுக்கு கூப்பன் முத்திரை

யாழ்ப்பாணம்,மே19

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து பிற பிரிவுகளில் வசிப்போருக்கான நிவாரணக் கூப்பன் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருப்போருக்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை புலோலியில் இயங்கும் பளை பிரதேச செயலகத்திலும் -

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருப்போருக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்திலும் - கூப்பன் முத்திரைப் பத்திரங்கள் வழங்கப்பட உள்ளதாக பளைப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (ஒ-13)

## ஹாட்லியில் பெற்றோருக்கு கருத்தரங்கு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஜி.சீ.ஈ.உயர்தர புகுமுக மாணவர்களின் பெற்றோர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அதிபர் மு.ஸ்ரீபதி தலைமையில் நடைபெறுகிறது.

பெற்றோர்கள் இக்கருத்தரங்கில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-173)


## றெனி பல் - மூக்குக்கண்ணாடி அகம்

1) உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள....
2) மிதப்புப் பற்களுக்கு கிளிப்போட.....
3) கண் பரிபே..ச்த்து கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள....

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:

## றெனி பல் - மூக்குக் கண்ணாடி அகம்




இல.288, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி.

இல.540, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (3913)

பிரதான வீதி,
பருத்தித்துறை.



தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு

## ஒரு நற்செய்தி!

**சீக்கோ காஸ் கம்பனியின் ஏக விநியோகஸ்தராக,**

## ஸ்ரீ மோட்டோர் வேக்ஸ்

136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

ஆகிய நாம் நியமிக்கப்பட்டுள்ளமையை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். உங்கள் நிறுவன ஒட்டுதல், வெட்டுதல், பொருத்துதல் போன்ற தேவைகளுக்குப் பயன்படுத்தும் ஒட்சிசன், அஸிட்லீன், கார்பைட் போன்ற காஸ் வகைகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(3910) *ஸ்ரீ மோட்டோர் வேக்ஸ்*


உழவு இயந்திர உரிமையாளர் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

15.05.2002 அன்று நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் கலந்துரையாடலுக்குச் சமுகம் தரத் தவறியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக 22.05.2002க்கு முன்பாக சங்க அலுவலகத்தில் பதிவு செய்யலாமென அறியத்தருகின்றோம்.

*முக்கிய குறிப்பு:-* இதுவே இறுதிச்சந்தர்ப்பமாகும்.

*"வல்லிபுரம்"*
தலைவர். (3905) *புலோலி.* செயலாளர்.

## மரண அறிவித்தல்

### இராயப்பு அந்தோனிப்பிள்ளை

(முன்னாள் மேற்பார்வையாளர், புனித வளன் கத்தோலிக்க அச்சகம்)

சுண்டுக்குளி, பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இராயப்பு அந்தோனிப்பிள்ளை அவர்கள் 17.05.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/1, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.* (3903)
தகவல்:
ஜேக்கப் *(மருமகன்)*


## HAYLEYS ANIMAL HEALTH PRODUCTS

### கால்நடை மருந்து வியாபாரிகளே!
### மற்றும் கால்நடைப் பண்ணையாளர்களே!!

உங்களுக்குத் தேவையான கீழ்வரும் ஹெலீஸ் (HAYLEYS) கால்நடை மருந்துப் பொருள்கள் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| i. | பிப்பரைசின் | PIPERIZIN |
| ii. | அல்சோல் | ALZOLE BOLUS |
| iii. | பேகொக்ஸ் | BAYCOX |
| iv. | பேரிக்கொல் | BAITICOL |
| v. | பொல்வோ | BOLFO |
| vi. | கிப்ராகோல் | HIPRACOL |
| vii. | நெகுவான் | NEGUVAN |
| viii. | சுப்பர்விற் | SUPERVIT |
| ix. | றிமொக்ஸ் | RHEMOX |
| x. | நெகசன் | NEGASUNT |
| xi. | புறொமிக்ஸ் | PROMIX |

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்:
(SOLE DISTRIBUTORS FOR JAFFNA)

## ஸ்ரீ மகா விஷ்ணு
## SHRI MAGA VISHNU

*No.70,72, STANLEY Rd, Jaffna.*
(GENERAL MERCHANTS & COMMISSION AGENTS)
(3914)

**சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)**

## சங்கானையில் அமைந்துள்ள மின்தறி நிலையம் குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி கோரல்

எமது சங்கத்திற்கு சொந்தமான 58″ அகலம் கொண்ட 52″ துணி நெய்யக் கூடிய 15 "மட்சுக்காவா" இயந்திரங்களும், 1 நூல் சுற்றும் இயந்திரமும், 1 பாவோடும் இயந்திரமும் கொணட மின்தறியாலை குத்தகைக்கு விடுவதற்குக் கேள்விக் கூற்றுக் கள் கோரப்படுகின்றன.

**கேள்வி வைப்புப் பணம் [மீளளிக்கக் கூடியது] ரூபா 250/=**
**கேள்விப் பத்திரப் பணம் 50/=**

கேள்வி விண்ணப்பம் ஏற்கும் இறுதித் திகதி 15.06.2002 நண்பகல் 1 மணி. கேள்விப் பத்திர விண்ணப்பப் படிவங்கள் சங்கானை ப.நோ.கூ.சங்க அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மின்தறிகளை காரியாலய வேலை நேரங்களில் பார்வையிடலாம். விண்ணப்ப மேலுறையின் இடது பக்க மூலையில் *"மின்தறியாலைக் குத்தகை"* எனப் போடப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு *"தலைவர், சங்கானை ப.நோ.கூ.சங்கம், சங்கானை"* என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும். எந்த நிலையிலும் கேள்விக் கூற்றை ஏற்கவோ, நிராகரிக்கவோ சங்க இயக்குநர் சபைக்கே அதிகாரம் உண்டு.

பொதுமுகாமையாளர்,
சங்கானை ப.நோ.கூ.சங்கம்,
சங்கானை.

(C/22191)


## ITP தகவல் தொழில்நுட்பப் பூங்கா

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
*T.P: 021-3641* *e-mail: itp@sltnet.lk*

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பின்வரும் கற்கைநெறிகள் 22-05-2002 அன்றிலிருந்து ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

**Certificate Courses: 2months including practicals**
* Word * Excel * Access
* AutoCAD * PageMaker * CorelDraw
700/-

**Certificate Courses: 3 months including practicals**
* VisualBasic * Java * Hardware
* Internet & E-Mail * C++ * Webpage Development
1500/-

**Diploma Courses: 5 months including practicals**

| | |
|---|---|
| * Dip in Ms-Office | 2800/- |
| * Dip in Desktop Publishing | 2400/- |
| * Dip in Computer Hardware Technology | 3200/- |
| * Dip in Software Development Technology | 4750/- |
| * Dip in Information & Communication Technology | 4750/- |

**Online Courses**
கணனி மூலமான நேரடிப்பயிற்சி

**Dip in PC Applications & Office Management**
*Duration -2months* 2000/-

*Workshop Practical*
* Internet Browsing Technique
* PC Hardware Maintenance
* Webpage Designing

*Duration 1month* 1000/-

சகல கற்நைெறிகளுக்கும் பதிவுக்கட்ணம் ரூபா 250 மட்டுமே.

மாணவர்கள் பதிவுகளை காலந்தாழ்த்தாது மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்: பணிப்பாளர்


## பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில்

யாழ்ப்பாணம்,மே19

சாவகச்சேரி றோ.க.த.பாடசாலை நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

தென்மராட்சி இடம்பெயர்வை அடுத்து மேற்படி பாடசாலை இதுவரை காலமும் வடமராட்சியில் இயங்கி வந்தது தெரிந்ததே. (எ)

## வறிய குடும்பங்களுக்கு இலவச உதவிகள்

அச்சுவேலி (ஜே/285) கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கு சுன்னாகம், நல்லூர் றோட்டறக்ட் கழகங்கள் ஒன்றிணைந்து கல்வி முன்னேற்ற வசதிகளை வழங்கவுள்ளன.

எனவே மேற்படி உதவிகளைப் பெறுவதற்கென ஏற்கனவே தெரிவான குடும்ப அங்கத்தவர்களை இன்று முற்பகல் 11 மணிக்கு கிராம அலுவலரின் அலுவலகத்துக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,மே19

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 24ஆம் திகதி நடத்தப்படவுள்ள அடையாள வேலைநிறுத்தம் தொடர்பான கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் சங்கத்தின் இணைச் செயலாளர்கள், தலைவர்கள், பொருளாளர்கள்,மாவட்ட உறுப்பினர்கள், தாய்ச்சங்க உறுப்பினர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்ட செயலாளர் கே.குமாரசாமி கேட்டுள்ளார்.


**லஷ்சுமி** இணுவில்.
3ஆவது வாரத்தை நோக்கி
ரஜனி, நக்மா, ரகுவரன்
**பாட்ஷா** (கலர்)
காட்சிகள்-10.30,2.30 (ப.நே.)
(3921)

**ராஜா** யாழ்ப்பாணம்
6ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
**தமிழன்**
தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
(C/22146)

**நாகம்ஸ்** சுன்னாகம்
சில தினங்களுக்கு மட்டும்
சரத்குமார், அபிராமி, முரளி, மனோஜ் நடித்த
**சமுத்திரம்**
(கலர்)
காட்சிகள்: 11.00,3.00,6.30 (புதிய நேரம்)
(3916)

**நிறைஞ்சனாஸ்**
சங்கானை
LEONARD DIC APRIO
KATE WINSLET
**டைட்டானிக்**
(தமிழாக்கம்)
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C-22147)


## அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

*மல்லாகம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்*

விமலராஜ் பெண் விஜயபிருந்தா
அல்லது பிருந்தா
இராமநாதன் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

வழக்கு இல. மண நீக்கம்/151எதிராக வழக்காளி

இரத்தினசிங்கம் விமலராஜ்
மே/பா ந.இரத்தினசிங்கம்
ஞானவயிரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு
மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

**மணநீக்க வழக்கொன்றை**

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2002 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**செ.விக்னேஸ்வரமூர்த்தி**
பதிவாளர்/ப.பிஸ்கால்/சமாதான நீதிவான்
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

குறிப்பு:விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**செ.விக்னேஸ்வரமூர்த்தி**
கையொப்பம், பதிவாளர்
பதிவாளர்/ப.பிஸ்கால்/சமாதான நீதிவான்
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

2002ஆம் ஆண்டு மே மாதம் 15 நாளாகிய இன்று
வரைபு:- ச.சிவரூபன்
வழக்காளியின் சட்டத்தரணி. (C-22194)

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்)

கொடிகாமம் கச்சாய் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சிதம்பரப்பிள்ளை பாலசுப்பிரமணியம் நேற்று (18.05.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் சிரம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும் இரங்கநாதன் - இராசபூபதி, தர்மலிங்கம் (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர் - தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் சகோதரரும் சிவஜோர்கேஸ்வரியின் கணவரும் பாலமுரளி, பாலமுகுந்தினி, பாலினி, பாலசுகந்தா, பாலகௌரி, பாலஜெயந்தினி ஆகியோரின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் வீதி, பாலாவித்தாள் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*கச்சாய் வீதி,*
*கொடிகாமம்.* (3923) தகவல்: மனைவி

## புண்ணியமூர்த்தி மாணிக்கவாசகர்

கரம்பகம், மிருசுவிலைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி மாணிக்கவாசகர் அவர்கள் நேற்று (18.05.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் இராசமணியின் அன்புக் கணவரும் சறோஜினியின் தகப்பனாரும் செ.மகேஸ்வரி, க.அருணாசலம், அ.கனகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), க.சரவணமுத்து, சு.பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற முதன்மை ஆசிரியர், தென்மராட்சி வலயம்), பு.திருவாதவூரார் (காசாளர், கொடிகாமம் ப.நோ.கூ.ச.) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
*கரம்பகம்,*
*மிருசுவில்.*

தற்காலிக முகவரி:
*ஆனைக்கோட்டை,*
*அடைக்கலநாயகி வீதி,*
*உயரப்புலம்.* (3925)

தகவல்: திருவாதவூரார்

## வைத்தியன் சின்னத்துரை

உரும்பிராய் வடக்கு, உரும்பிராயை (கேசன்) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியன் சின்னத்துரை நேற்று (18.05.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியன் - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவலை - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், கோகிலவதியின் அன்புக் கணவரும், நிலானி, நிசாந்தன் (யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வடக்கு (கேசன்),*
*உரும்பிராய்.* (C/22195)

தகவல்: குடும்பத்தினர்.


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் வைகாசித்திங்கள் 10ஆம் நாள் (24.05.2002) வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணி முதல் 1.35 மணி வரையுள்ள சுவாதி நட்சத்திரமும், சிங்க லக்கினமும் வெள்ளி ஓரையும் கூடிய சுபமுகூர்த்தத்தில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**தியாகராசமூர்த்தி (ராசன்)**
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**துஷ்யந்தி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், தெகிவளை "கொனிமரா" திருமண மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்:**

**திருமதி த.முத்தையா,**
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்,
இலங்கை



**திரு.திருமதி நவரத்தினராசா,**
958/25, தலையாழி லேன்,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம், இலங்கை.

(3922)

(இரு வீட்டார் அழைப்பு)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் சோதனை நிலையத்திலும் சோதனை நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாரத்தில் ஆறு நாள்கள் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை முகமாலை சோதனை நிலையம் ஊடான போக்குவரத்து இடம்பெறுகின்றது. (ஐ-3)

## மீள் குடியமர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டது தொடர்பாக நேற்றிரவு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களை மீளக்குடியமர அனுமதி மறுப்பதற்கு கண்ணிவெடி அகற்றாமைதான் காரணம் என்றால் அதனை ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனால், பல இடங்களில் இராணுவத்தினர் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி தன்னிச்சையாக செயற்படுவதைக் காணமுடிகிறது. மக்களை மீளக்குடியமர அனுமதிக்க முன்னர் கண்ணிவெடிகள் தொடர்பான தகவலைத் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், குடியமர அனுமதித்து விட்டு பின்னர் அவர்களை வெளியேற்றுவது தவறானதும், புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலுமாகும் - என்றார் (ஐ-4)


# விவாஹ சோபன அழைப்பு

அன்புடையீர்!

இறைவனின் கிருபையினால் நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ சித்திரபானு வருஷம் வைகாசித் திங்கள் எட்டாம் நாள் (22.05.2002) புதன்கிழமை பகல் 10.11 மணிமுதல் 11.40 மணிவரையுள்ள கடகலக்கினமும், ஏகாதசித் திதியும், அத்த நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்,

சிவஸ்ரீ சுப்பிரமணிய ஐயரின் பௌத்திரனும் எமது புத்திரனுமாகிய **ஸ்ரீரங்கன்** அவர்களுக்கும்



சிவஸ்ரீ சிதம்பரக்குருக்களின் பௌத்திரியும் எமது புத்திரியுமாகிய **நீரஜா** அவர்களுக்கும்

கன்னிகாதான, பாணிக்கிரண, மாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் வருகைதந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்புபசாரம்: 23.05.2002 வியாழக்கிழமை நண்பகல் மணமகன் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

அன்புள்ளங்கள் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தங்கள் நல்வரவை நாடும்:

சிவஸ்ரீ சுப்பிரமணிய சுந்தரராஜக்குருக்கள்
சு.விஜெயலக்சுமி தம்பதிகள்
முத்துமாரி அம்மன் கோயில்,
வழக்கம்பரை, தொல்புரம், சுழிபுரம்.

சிவஸ்ரீ சி.மகேந்திரநாதக்குருக்கள்
ம.சிவகுமாரி தம்பதிகள்
குருக்கள் பகுதி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

இரு வீட்டார் அழைப்பு

(சி-22158)


# மன்னார் கட்டுக்கரைக்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்!

மன்னார்,மே19

மன்னார் கட்டுக்கரைக்குளம் கடந்த 15 வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாததால் அது எந்த நேரத்திலும் உடைப்பெடுக்கும் அபாய நிலை தோன்றியுள்ளது. குளம் உடைப்பெடுத்தால் சுமார் 25ஆயிரம் பொதுமக்கள் அதனால் பாதிக்கப்படுவர். எனவே அக் குளத்தை உடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்ட அவசர கோரிக்கையை நீர்ப்பாசன அமைச்சரிடம் ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் விடுத்துள்ளார்.

அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்தில் 75 சதவீதமான நெல் வயல்களுக்கும் இந்தக் குளம் மூலமே நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த 15 ஆண்டு காலமாக அக்குளத்தில் புனர் நிர்மாணப்பணி ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக அக்குளம் உடைப் பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஆகியோர் அடங்கிய குழுவே இந்தச் சந்திப்பில் பங்குபற்றும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் நடைமுறை, உத்தேச நேரடிப் பேச்சு போன்ற விடயங்கள் குறித்து இந்தப் பேச்சின் போது விவாதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது (ஐ-4)

## பொங்குதமிழ்

பாரிஸ்,மே19

பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் இன்று எழுச்சி பூர்வமாக 'பொங்குதமிழ்' நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது லண்டன் சென்றுள்ள யாழ்.மாவட்ட எம்.பி.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்றைய பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.


**Children Program**

மேற்படி 2000/2001ஆம் ஆண்டு பயிற்சி நெறியை முடித்த மாணவர்கள், 21.06.2002ஆம் திகதிக்கு முன் காரியாலயத்தில் வந்து தங்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவும்.

Director
No.07, Palaly Road,
Jaffna.

(C/22192)

**OXFORD ENGLISH ACADEMY**

A/L எடுத்தவர்களுக்கான

*SPOKEN ENGLISH* WITH *GRAMMAR*

புதிய பிரிவுகள் ஆரம்பம்;

23.05.2002

நெல்லியடி (காலை 7மணி)

அனுமதியை MATHS CENTREஇல் பெற்றுக்கொள்ளலாம்.

பருத்தித்துறையில் (பி.ப. 3மணி)

P.K. Lane, பஸ் நிலையம் அருகில்.

By-Mr.B.JOTHY

(அனுமதியை முன்கூட்டியே பெறவும்) (3669)

**SUBRA (14)**

கல்வி நிறுவனம், சித்தன்கேணி

English Spoken With Grammar

By-Britto

பிரிவு - I

ஆரம்பம்: 23.05.2002

(வியாழன்) காலை 7 மணி

**பேச்சுச் சிங்களம்**

By -லீலாகிருஷ்ணன்

பிரிவு - I

ஆரம்பம்: 23.05.2002

(வியாழன்) காலை 8 மணி (C/22171)

ஆர்வம் + **Career.com Institute** = நிச்சயமான எதிர்காலம்

**உங்களது பிரச்சனைகள் எங்களுக்கு தெரியும்.**

- A/L எடுத்துவிட்டேன் அடுத்து...................?
- பட்டதாரியாகிவிட்டேன். தகுதியான ஒரு வேலை..................?
- பல்கலைக்கழக கல்வியை முடிக்கும் பொழுதே மேலதிகமான ஒரு தகமையும் தேவைப்படுகின்றதா.....?
- இப்பொழுது உயர் தொழினுட்ப கல்லூரி மாணவன். நாளை...............?

**உங்கள் கேள்வி எதுவாயினும் அதற்குரிய பதில் Career.com மாத்திரமே.**
**யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் மீண்டுமொரு திருப்புமுனை.**
**யாழ்.நகரில் உயர் தொழில் சார் முகாமைத்துவ, கணக்கியல் கற்கை நெறிகள்.**

➢ CHARTERED ➢ I.A.B
➢ C.M.A ➢ A.A.T

நாளைய உலகின் தொழில் வல்லுனராக இன்றே உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள் **Career.com** உடன்

எங்களின் சேவைகள்....

* தகமை, அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களினால் , நடத்தப்படும் விரிவுரைகள்.
* கொழும்பிலிருந்து வரும் துறைசார் நிபுணத்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் வழங்கப்படும் கருத்தரங்குகள்.
* தகுதியான மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வசதிகள்.
* பரீட்சைக்கான உங்கள் பதிவுகள்.
* உங்களுக்கென்றே மிகக் குறைந்த கட்டணங்கள்.
* அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புக்கள் இலவசமாக.

**"கடந்த காலங்கள் திரும்பி வராது. இனி வரும் பொழுதுகளை உங்களுக்கே உங்களுக்காக செலவிடுங்கள்"**

*மேலதிக தொடர்புகளுக்கு....20/05/2002 இல் இருந்து*

இல.27, பேராலய வீதி,யாழ்ப்பாணம்.
(ஆயர் இல்லம் முன்பாக)
திங்கள்,புதன், வெள்ளி - 10 am - 4 pm
சனி, ஞாயிறு - 10 am - 4 pm

ஜோனெக்ஸ் மல்ரி பலஸ்
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
திங்கள்- வெள்ளி - 9.30am - 5.30pm
சனி - 9.30am - 2.00pm

**A/L மாணவர்களுக்காக**

மிகு நுட்பமானதும் திட்டமிடப்பட்டதுமான



கணினிக் கருத்தரங்கு

கணனி - அறிமுகம்
வேலைவாய்ப்பில் - கணனி
இன்ரநெற்
கணனி - வலைப்பின்னலில்
மென்பொருட்கள்/வன்பொருட்கள்

19,20,21ம் திகதிகளில்

**பதிவுகளுக்கு முந்துங்கள்**

புதிய வகுப்புகள் யாவும் 25-05-2002 லிருந்து ஆரம்பமாகும், பதிவுகளுக்கு

Director

STP Your Partner in IT Solutions
54A, Palaly Road, Jaffna T.P: 2674, E.mail: stpedu@slt.lk


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.